890

ஜகன்மோகினி

1—10—1949. அணா நான்கு.



30 DEC 1949
MADRAS

புரட்டாசித் திங்கள்

இந்தமாதம்

திருவேங்கடமுடையான், திருவேங்கடநாதர், இருவர் திருநட்சத்திரமும் இம்மாதம் திருவோண நன்னாளென்றால் இதனுடைய பெருமையைப் பேசவல்லார் யாரே?

திருவேங்கடமுடையான்—ஸ்ரீநிவாஸன்:

வேதத்தின் எல்லையைக் கடந்தவன். தமிழ்நாட்டின் வடவெல்லையில் நிற்பவன். தீராத வினையனைத்தும் தீர்ப்பவன். மண்ணும் விண்ணும் தொழநிற்பவன். ஆழ்வார்கள் ஒன்பதின்மரின் அருளமுதத் தமிழ்ப்பாடல் கொண்டவன். "கலௌ வேங்கடநாயக:" கலிகாலத்தில் கண்கண்ட தெய்வமும் அவனே.

திருவேங்கடநாதன்—வேதாந்ததேசிகர்:

இவ்வாசார்ய ஸார்வபௌமரின் சிறப்பைப் பேச நாவாயிரமும் நாளாயிரமும் வேண்டும்! கச்சிப்பதியில் தூப்பில் என்னும் பகுதியில் திருவேங்கடமுடையான் திருவருளால் அவனது திருமணியின் அம்சமாய்த் தோன்றியவர். பரந்த ஞானத்துடன் சிறந்த அனுஷ்டானமும் வைராக்ய நிஷ்டையும் உடையவர். வடகலையும் தென்கலையும் திகழ்ந்த நாவர்; இருமொழிக்கடலும் கரைகண்டவர். காவ்ய நாடகங்கள் தொடங்கி வேதாந்த விசாரபர்யந்தம் எண்ணிலாத இனிய நூல்கள் இயற்றியருளியவர். தமிழ் மொழியிலும் ஆழ்வார்கள் பக்கலிலும் பேராதரமுடையவர். தன்னைச் சந்தமிகு தமிழ்மறையோன் என்றவர். 32 ரஹஸ்ய க்ரந்தங்கள் அருளிச்செய்த உத்தம வித்தகர். ஸ்ரீ ராமாநுஜரின் கீதாபாஷ்யத்திற்குத் தாத்பர்ய சந்த்ரிகையும், ஸ்ரீ பாஷ்யத்திற்குக் காப்பாக பலபல க்ரந்தங்களையும் அருளிச்செய்தவர். எம்பெருமானார் தர்சனத்திற்கு இந்தமஹான் செய்தருளிய உபகாரம் அளவுகடந்தது.

— ஸ்ரீ வைஷ்ணவதாஸன்.

எதிர்பார்த்தபடியே!

சென்ற இதழில் "இந்த மாதம்" பகுதியில் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையைப்பற்றி எழுதும்போது "ஸ்ரீவைஷ்ணவதாஸன்" தி. அ. ரா. ஸ்வாமிக்கு ஒரு பெரியபிரச்னை எழுந்தது—பரந்தரஹஸ்யம், மாணிக்கமாலை முதலிய கிரந்தங்கள் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை அருளியவையா அன்று என்று. இந்நூற்றாண்டின் வ்யாக்யான சக்ரவர்த்தியாகிய ஸ்ரீப்ர. அண்ணங்கராசார்யஸ்வாமியின் ஆராய்ச்சிப்படி ஷை கிரந்தங்கள் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையினுடையவை யன்று என்று விட்டுவிடுவதா, அல்லது பழைய நம்பிக்கைப்படி பெரிய திருமுடி அடைவில் கண்டுள்ளதுபோல ஜாபிதா கொடுப்பதா என்று சம்சயித்தபோது, நமது வாசகர்களில் சம்பிரதாய கிரந்தங்களைப் படித்த பேரறிஞர்களின் அபிப்ராயத்தை அறிவதற்குச் சந்தர்ப்பமேற்பட்டது என்று தெளிந்து, பழையபடியே கிரந்த ஜாபிதா வெளியிட்டோம். 3வ முதற்கொண்டு பலமஹனீயர்களிடமிருந்து நீண்ட கடிதங்கள் வந்து, வைணவ உலகம் ஸ்ரீ. ப்ர. அ. ஸ்வாமியின் ஆராய்ச்சியையே உகந்து ஒப்புக்கொண்டுள்ளதென்பதை விளக்கலாயின. ஸ்ரீ. ப்ர. அ. ஸ்வாமியின் பெருமையை அறிய இது எதிர்பார்த்தபடியே ஒரு அளவு கோலாயிற்று.

— வை. மு. ஸ்ரீ.

30 DEC 1949

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும்
பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
- திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி!
மனத்தைச் சார்ந்து.
- வீரராகவ கவி

Vol. 26. விரோதி ஞு, சுதந்தர சகாப்தம் October.
No. 10. புரட்டாசி மீ 27-ம் திங்கள் 1949.

காந்தி ஜயந்தி

புரட்டாசி மாதம் பிறந்ததுமே கோவிந்தகோஷம் நம் காதுகளில் ஒலிப்பதேபோல் அக்டோபர் பிறந்ததும் மஹாத்மா ஜயந்திகீதம் நம்மைப் பரவசப்படுத்துகிறது. "மஹாத்மா" என்ற பெயரைக் கேட்டதுமே "ரகுபதிராகவ ராஜாராம்" என்ற 'ராம்-துன்'னும், கீதாச்லோகங்களும், கடைசியாக நாம் நேரில் கண்ட பிரார்த்தனைக் கூட்டமும்தான் நினைவுக்கு வருகின்றன—மனக்கண்முன் பிரத்யட்சமாகின்றன. (இதையே மேலட்டை ஓவியம் சித்திரிக்கின்றது.)

தேசீய விடுதலைக்காக எவ்வளவு உழைத்தாரோ மஹாத்மாஜி, அதற்கு மேலாகவே சத்தியநெறிக்கும் ஆத்மச்ரேயஸ்ஸுக்கும் அரும்பாடுபட்டிருக்கிறார். பகவந்நாம பஜனத்தின் சிறப்பை சிறு குழந்தையின் உள்ளத்திலும் பதியவைத்துவிட்டார். இதர யுகங்களில் தியான—தபஸ்ஸாலும், யக்ஞத்தாலும், அந்தரங்க கைங்கர்யத்தாலும் பெறப்பட்ட முக்தியானது, தோஷநிதியான இக்கலியுகத்தில் மிகச்சுலபமாக ஹரிநாம ஸங்கீர்த்தனத்தால் ஸாதிக்கப்படுகிறது என்ற தத்துவத்தை உணர்ந்தே அவர் நடந்தார்.

கோஸ்வாமி துளசிதாஸரின் அமுதகானம் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் பாடியிருக்கிறார்: "ஸ்ரீ ராமரின் பெயரைத் தப்பித்தவறி மறந்துபோய் ஒருவன் உச்சரித்துவிட்டாலும், அல்லது ஸ்ரீ ராமனை எந்த காரணத்தினாலாவது ஒருவன் நினைத்துவிட்டாலும், அவனும், அவனது மாதா பிதாக்களும், புத்திராதிகளும் தன்யரே! எனது சரீரத்தின் தோலினால் செய்யப்பட்ட இரு பாதரக்ஷைகளை அவன் அணிந்துகொள்ளட்டும்! பிறவியால் உயர்வு தாழ்வு இல்லை. ஹரியை நினைப்பவன் உயர்ந்தவன்; நினைக்காதவன் தாழ்ந்தவன்."

மகாத்மாஜியின் வாழ்க்கையின் பல படிப்பினைகளில் நாம பஜன ப்ரசாரத்தை முக்கியமானதாகக் கொள்ளலாம். ஏனெனில், "பக்தர்கள் கூட்டமாகக்கூடி எங்கு என் புகழைப் பாடுகிறார்களோ அங்கே நான் கட்டாயம் இருக்கிறேன்" என்று பகவான் கூறியிருக்கிறார். வாமன புராணமும் கூறியுள்ளது: "இவ்வுலகில் நாராயண நாமமானது ஒரு பிரஸித்த திருடன்! காதினுள் நுழைந்த மாத்திரத்தில் பல பிறவிகளாகச் சேர்த்துவந்த பாபமூட்டைகளையெல்லாம் அது திருடிக்கொண்டு போய்விடுகின்றது!". பாத்ம புராணம் மேலும் ஒருபடி செல்கிறது: "பாபத்தைமட்டுமா போக்குகிறது? இஷ்டசித்தியையுமல்லவா அளித்து ரக்ஷிக்கிறது!" —வை. மு. ஸ்ரீ.



பி.ஸ்ரீ.

8. செல்வன் யார், சக்தி எது?

ஒரு வியாபாரி—பெருஞ்செல்வன்—வீடு போவென்னக் காடு வாவென்றழைக்கும் நிலையில் இருக்கிறான். தொட்டதெல்லாம் பொன்னாக்கும் கலை, கல்லாக்கலையாக வந்துவிட்டது இவனுக்கு. சில ஆண்டுகளில் பல வியாபார தந்திரங்களைக் கையாண்டு கோடீச்வரனாகிவிட்டான். தான் இல்லாவிட்டால் இனி உலகில் ஐசுவரியத் திற்குக் கொழுகொம்பாவார் யாரே? —என்ற கவலைதான் இவனுக்கு, வயது ஏறஏற. 'செல்வோம், செல்வோம்!' என்று செல்வம் ஒருவனிடமிருந்து வேறொருவனிடம் சென்றுகொண்டேயிருக்குமே, அந்தச்செல்வத்தையும் 'நில்லு நில்லு' என்று அதட்டி மடக்கித் தன் கணக்குப் புத்தகத்திற்குள்ளே சிறைப்படுத்தி வைத்திருக்கிறான் இந்த வியாபாரி என்றால், இந்தச் செல்வன் பெருமை கொஞ்சமோ? இப்போது இந்தச் செல்வம் செல்லாவிட்டாலும், இந்தச் செல்வன் இவ்வளவு செல்வத்தையும் விட்டுச் செல்லவேண்டிய காலம் வந்துவிட்டதே!

வைத்தியர்கள் வந்துபார்த்து 'இனிமேல் தாங்கள் எமனை ஏய்க்கமுடியாது' என்றுசொல்லிப் போய்விட்டார்கள். கடைசியாக வந்துபார்த்த வைத்தியசிகாமணி, வியாபாரியை நோக்கி, 'இனி அதிக வார்த்தைகளைச் செலவு செய்யவும் தங்களுக்கு அவகாசம் கிடையாது. அவ்வளவு அவசர அழைப்பாக வந்து சேர்ந்துவிட்டது! ஏதாவது இரண்டொரு வார்த்தை எங்களிடம் சொல்லிக்கொள்ளத்தான் தங்கள் ஹிருதய சக்தி இடங்கொடுக்குமென்று நினைக்கிறேன். ஒரே வார்த்தையில் பிராணன் போனாலும் போய்விடும். தவறினால் இரண்டு மூன்று நாலு வார்த்தைகளில் உயிர் பிரிந்துவிடும். அதிகமாய் இழுத்துக்கொண்டுபோனாலும் ஆறுவார்த்தைகளுக்குமேல் பேசமுடியாது' என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான்.

வியாபாரியின் படுக்கைக்குப் பக்கத்தில் இந்த வைத்தியசிகாமணி தவிர ஒரு பாதிரியாரும் வியாபாரியின் ஏக புத்திரனும் இருக்

183154

தார்கள். 'இனிமேல் இந்தச் செல்வன் பேசக்கூடிய ஒன்று முதல் ஆறுவார்த்தைக்குள்ளே கிறிஸ்துவை அழைக்கலாமே; பாவ மன்னிப்பும் வேண்டிக்கொள்ளலாமே' என்று பாதிரியார் எண்ணினர். ஒரே வார்த்தையில் 'கிறிஸ்துவே!' என்று அழைக்கலாம். இரண்டு வார்த்தைகளில் 'தேவ குமாரரே' என்று கூப்பிடலாம். மூன்று வார்த்தைகளில் 'தேவ குமாரரே! மன்னியும்' என்று மன்னிப்பும் வேண்டிக்கொள்ளலாம். நாலு வார்த்தைகளில் 'தேவ குமாரரே! பாவத்தை மன்னியும்' என்று தெளிவாக வேண்டிக்கொள்ளலாம்' ஐந்து வார்த்தைகளில் 'தேவகுமாரரே! என் பாவத்தை மன்னியும். என்று வேண்டிக்கொள்ள முடியும். ஆறு வார்த்தைகளில் 'தேவ குமாரரே! உம்மை நம்புகிறேன். பாவத்தை மன்னியும்' என்று விசுவாசத்தையும் விண்ணப்பித்துக்கொள்ளலாம். பொருள் தேடுவதில் மேதாவியாக விளங்கியவனுக்கு இப்போதாவது பரம்பொருள் தேவை என்பதைச் சொல்லவா வேண்டும்? இது பாதிரியாரின் நம்பிக்கை. வைத்திய சிகாமணியோ 'வைத்தியசாலைக்குத் தர்மமாக ஏதாவது கொடுப்பதாய்ச் சொல்லமாட்டானா பாவி!' என்று வியாபாரியின் வாய் பார்த்திருந்தான்.

ஆனால் வியாபாரி சொன்னதென்ன?

சம்பாதி!

என்றான் முதல்முதல். மேலும் சம்பாதிக்கவேண்டுமென்ற இந்தப் புத்திமதி அருமை மகனுக்குத்தான். ஒரே வார்த்தையில் பிராணன் போவதானாலும் போய்த் தொலையட்டும். 'ஓம்' என்ற பிரணவம் போல் 'சம்பாதி' என்ற மகா மந்திரத்தை உச்சரித்தாகிவிட்டதே மகன் பொருட்டு!

ஆனால் இரண்டாவது வார்த்தை சொல்லவும்சக்தி இருக்கிறதே!

சம்பாதி பணத்தை!

என்றான். 'சம்பாதி' என்று மட்டும் நின்றுவிட்டால் ஒரு வேளை அசட்டுப் பிள்ளை அனாவசியமாக கல்லறிவைச் சம்பாதிக்கத் தொடங்கி விட்டால்?

மூன்றாவது நாலாவது வார்த்தைகளுக்கும் மூச்சும் பேச்சும் இருக்குமென்று தோன்றியதால் பெருஞ்செல்வனான வணிகன்,

சம்பாதி பணத்தை, என் மகனே!

என்று சொல்லிவிட்டான். பணம் சம்பாதிக்கவேண்டிய புத்திமதியை விழலுக்கிறைத்த நீர்போல் வைத்தியனோ பாதிரியாரோ உபயோகித்துக் கொண்டால் என் செய்வது! ஆகவே இந்தப் புத்திமதி தன் மகனுக்குத்தான் என்று சித்தாந்தம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இன்னும் ஏதோ ஒரு வார்த்தை இரண்டு வார்த்தை சொல்லிவிடலாமென்று தோன்ற வணிகப் பிரபு,

சம்பாதி பணத்தை, என் மகனே!

யோக்கியதையுடன் முடியுமானால்!!

என்று சொல்லித் தீர்த்துவிட்டான். உயிரும் தீர்ந்துபோயிற்று. முருகக் கடவுளின் ஷடாட்சரம்போல் ஆறு வார்த்தைகளில் முடிந்துவிட்டது மகனுக்கு அருளிய மகாமந்திரம்.

ஏன் இந்தச் செல்வன் கடைசியாக 'யோக்கியதை'யையும் இப்படி ஒட்ட வைத்திருக்கிறான், தன் மகன்தேடிக் குவிக்கவேண்டிய பெரும்பொருளுடன்! 'மணமும் அவர்க்கு ஒரு வாணிபம்!' என்று ஒரு வியாபாரியைக் குறித்து 'மனோன்மணீயம்' வருணிக்கிறதல்லவா? திருமண வைபவத்தையும் திருவாளர்களான வணிகர்கள் ஒரு வியாபார தந்திரமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களாம்,—தங்கள் சொந்தப் பிள்ளைகள் பெண்களின் திருமண வைபவங்களையும் தான்! இத்தகைய செல்வர்கள் யோக்கியதை என்ற ஒழுக்கத்தையும் ஒரு வியாபார தந்திரமாக—எத்தனையோ வியாபார தந்திரங்களில் ஒன்றாகத்தான்—பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்றால், என்ன அதிசயம்!

'யோக்கியதையுடன்' என்று மூச்சு நின்று போகாமல் 'முடியுமானால்' என்பதைச் சேர்த்துச் சொல்லும்வரை பிராணன் இழுத்துக்கொண்டிருந்ததே! இது இந்தப் பெருஞ் செல்வனின் சித்த சக்தி! ஆனால் இந்தச் செல்வன் செல்வனும் அல்லன், இவனுடைய சக்தி சக்தியுமன்று.

பரம்பொருளே பெரும்பொருள்

உண்மையாகப் பார்த்தால் இறைவன்தான் செல்வன். பாதிரியார் கிறிஸ்துபகவானுக்குப் பிரார்த்தனை செய்யுமாறு வியாபாரியைத் தூண்டினாரே, அந்தப்பெருமானே செல்வன்; அவன் அடி பணிந்து செய்யும் பிரார்த்தனை செல்வம். ஆம், பக்திச் செல்வத்திற்கும் மேலான செல்வமும் உண்டோ?

திருமாலே செல்வன் என்பர் வைஷ்ணவர்கள். ஆம், செல்வம் என்ற ஸ்ரீதேவியை உடையவன்—திருவை உடையவன்—திருமால். லட்சுமிகடாட்சம் மிகமிகச் சொற்பமாயிருக்கிறது உலகப் பெருஞ்செல்வர்களிடத்திலே. இத்தகைய லட்சுமியின் கடைக்கண் பார்வையே இந்திர பதவிக்கும் பிரம்ம பதவிக்கும் உயர்த்திவிடுகின்றதாம். திருமாலோ மகாலட்சுமியைத் தம் மார்பகத்தே வீற்றிருக்கச் செய்கின்றவராதலின் ஸ்ரீமானான ஸர்வேச்வரனாகி விடுகிறாராம்.

லட்சுமிகடாட்சத்தால்ஒருவனுக்குச் செல்வச் சீருடன் பேரும் கிடைத்துவிடுகிறது. ஒரு பேரா, இரண்டுபேரா?—ஓர் அரசனுக்கு ராஜலட்சுமியின் கடைக்கண் பார்வையால் எத்தனை பேர்களும் பட்டங்களும் கிடைத்திருந்தன! (இந்த ஜனநாயக காலத்திலும் பொதுவுடைமைக்காலத்திலும் தான் லட்சுமி அரசர்கள்மீது சிறிதும் தயவில்லாமல், கடைக்கண் செலுத்தாமல் முகத்தை வேறு பக்கமாய்த் திருப்பிக் கொண்டிருக்கிறாள்!) ஆனால் அந்தக் காலத்திலோ? ஏன், பிரிட்டிஷ் இந்தியாவிலும், சுதந்திரம் பறிகொடுத்த சுதேச அரசர்களும் கெஜட்டில் எத்தனை வரிகளைத் தங்கள் பேர்களாலும் பட்டங்களாலும் நிரப்பியிருந்தார்கள்!

ராஜாதிராஜனாகிய பகவானோ, திருமார்பில் திருமகள் நிலை பெற்றிருப்பதால் 'ஸஹஸ்ரநாமம்' என்ற பேராயிரமும் பெற்று விளங்குகிறானும், இந்தப் பேர்களால் நிரம்பியிருக்கும் 'ராஜாங்க

ஜெட்' வேதம்தான்! 'வேதம் செப்பும் பேராயிரம்' இந்தப் பெருஞ் செல்வனுக்குச் சேர்ந்துவிட்டது ஸ்ரீதேவியால் என்கிறார் ஒரு கவிஞர்.

லட்சுமிகடாட்சத்தால் அரசர்கள் பொன்முடி புனைந்துகொண்டார்களல்லவா? நாராயணனும் தேவியாகிய பொன்னரசியின் பெருமையால் பேராயிரத்துடன் 'பொன்முடி ஆயிர' மும் புனைந்து கொண்டானும். ஒரு பிரதேச ராஜாவுக்கு ஒரு முடியென்றால், அகிலலோக - ஸாம்ராஜ்யத்திற்குப் 'பொன்முடி ஆயிரம்' அறிகுறியாக வேண்டுமே!

பழைய காலத்தில் அரசர்கள் முடிமாலை தரித்துக்கொள்வார்கள். அப்படியே ஸர்வேச்வரனும் ஆயிரம் பொன்முடிகளிலும் ஆயிரம் துளசிமாலைகளைத் தரித்துக்கொண்டிருக்கிறானும். 'நறை பெய் துளவத் தார் ஆயிரம்' என்கிறார் கவிஞர். வாசனை பெய்திருக்கும் அழகிய பச்சைத் துளசி பொன்னிலும் உயர்ந்ததாகப் பொன்முடிகளை அலங்கரிக்கிறது!

ரஸிகர்களான அரசர்களும் செல்வர்களும் கவிஞர்களைப் பொருளால் ஆதரித்துப் பாமாலை சூட்டிக்கொள்வதும் உண்டு. 'உயர்ந்த கவியாக, உத்தமக் கவியாக ஒன்று கிடைத்தாலும் எங்கள் பாக்கியம், எங்கள் செல்வம்!' என்று இருந்தார்கள். 'இந்தப் பாக்கியமும் லட்சுமிகடாட்சத்தால் எங்களுக்குக் கிடைத்தது' என்று மகிழ்ந்துபோனார்கள். ராஜாதிராஜனும் தேவாதிதேவனுமாகிய ஸ்ரீமந்நாராயணனுக்குக் கிடைத்திருக்கும் பாமாலைகளைத்தான் என்னென்பது? 'ஆரா அமுதக் கவி ஆயிரம்' என்கிறார் கவிஞர். யார் சொன்ன கவி, தெரியுமா? 'நம் திருக்குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆரா அமுதக் கவி ஆயிரம்' என்கிறார்.

ஸ்ரீதேவியுடன் சேர்ந்து அகிலலோக ஆட்சி புரியும் பகவானுக்குத் தேவியின் அருளால் கிடைத்திருக்கும் பாக்கியம் முழுமையும் பார்த்துவிடுவோம் ஒரு முழுக்கவியிலே:

> சேரா தனஉள வோதிருச் சேர்ந்தார்க்கு? வேதம்செப்பும்
> பேரா யிரம்,பொன் முடி ஆ யிரம்,நறை பெய்துளவத்
> தாரா யிரம்,நம் திருக்குரு கூர்ச்சட கோபன்சொன்ன
> ஆரா அமுதக் கவிஆ யிரம்அவ் அரியினுக்கே!

பக்திச்செல்வமும் சக்திச்செல்வமும்

திருவை அடைந்திருக்கும் திருவாளனாகிய பகவானே உண்மைச் செல்வன் என்பது இக்கவிஞர் கருத்து. இச்செல்வனை வழிபடும் பக்திச் செல்வமே செல்வம் என்பதும் குறிப்பு. 'முதல் முதல் தேடிக்கொள்ளவேண்டியது பக்திச்செல்வம்தான்; மற்றச் செல்வங்களெல்லாம் பக்திச் செல்வத்தைத் தொடர்ந்து தாமே வந்தடையும்' என்று கிறிஸ்தவர்கள் கூறுவதுண்டு. இதை ஸ்ரீ வைஷ்ணவம் சைவம் முதலான பக்தி மதங்களுக்கெல்லாம் ஒரு 'பொதுவுடைமை'க்கொள்கை யென்றுசொல்லலாம்.

சிவநேசச் செல்வர்களின் தலைவரென்று கருதப்பெறும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் 'கோயிலை'ச் சிறப்பித்துப் பாடும்

போது இக்கொள்கையை எப்படி வெளியிட்டிருக்கிறார் என்று பார்க்கலாம். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக் கோயில் என்றால் ஸ்ரீரங்கம்; சைவர்களுக்குக் கோயில் என்றால் சிதம்பரம். சிதம்பரத்திலுள்ள பக்தமணிகள் முதல்முதல் தேடியது செல்வத்துள் செல்வமாகிய சிவ பக்திதான், சிவன் அருள்தான். அவர்களுக்குக் கிடைத்ததோ அருட்செல்வம் மட்டுமல்ல. அருட்செல்வத்தைத் தொடர்ந்து அறிவுச் செல்வம், பொருட் செல்வம், கலைச்செல்வம், சிற்பச் செல்வம், வாழ்க்கைச் செல்வம் எல்லாம் கிடைத்தனவாம்.

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே!

ஒரு கிரேக்க அறிஞர் சொன்னார், 'ஒரு பெரிய மாளிகையில் குறுகிய உள்ளத்தைப் பார்ப்பதைக்காட்டிலும் ஏழைக் குடிசையொன்றில் விசால ஹிருதயத்தைப் பார்ப்பது ஆனந்தம்' என்று. திருஞான சம்பந்தரோ பெரியபெரிய மாளிகைகளில் பெரியபெரிய உள்ளங்களைப் பார்க்கிறார். வானளாவிய செல்வநெடு மாடங்களில் வானளாவிய பக்தியுள்ளங்களைக் கண்டு பரவசமாகிறார். பரமேச்வரன் செல்வன் என்றால்,—பரமேச்வரபக்தி செல்வம் என்றால், —இத்தகைய பக்தமணிகளும் செல்வர்களே என்பது திருஞானசம்பந்தரின் திருவுள்ளம்.

இத்தகைய செல்வவாழ்க்கை வாழுமாறு நம்மைச் செலுத்தும் சக்தியே சக்தி.

மஞ்சள் குங்குமம்

ஸ்ரீமதி. வஸுமதி ராமஸ்வாமி

"வாருங்கள் கலா, கமலா! நவராத்திரி ஆன அலுப்பு; சற்று படுத்துக்கொண்டிருந்தேன்."

"ஆமாம் மாமி அலுப்பாகத்தானிருக்கிறது...என்ன விசேஷம் பார்வதம் கூட வந்திருக்கிறாளே? ஒரு நாளைய கல்யாணம், நவராத்திரியில் அழைப்பு ஒருநாள் இரண்டுநாள் போட்டு மஞ்சள்குங்குமம் கொடுப்பது இவைகளில் எவ்வளவு சௌகர்யம் இருக்கிறதோ அவ்வளவு அசௌகர்யமும்தான்."

"ஆரம்பித்தாயே கலா,உன் குதர்க்கம்விடாது. ஒருநாளைய கல்யாணத்தில் எவ்வளவோ சௌகர்யம்–சிக்கனம் எல்லாமிருக்கிறது. அதில் சிரமத்திற்கு இடமேஇல்லை. அளக்கிறாயே."

"அவசரப்படாதே கமலா, சற்று நிதானமாக யோசித்துப்பார். இப்பொழுது காலம் வெகு வேகமாக ஓடுவதுபோல் நமக்கு ஒரு உணர்ச்சி இருக்கிறதல்லவா? அதுவேன்? காலம் ஓடவில்லை. நாம் தான் ஓடுகிறோம். ஒருவருஷத்தில் செய்யவேண்டிய செய்கைகளையும், அதன் அனுபவங்களையும் ஒரே மாதத்தில் நடத்தி விடுகிறோம். நான்கு நாளைய கல்யாணத்தில் ஆனந்தமாக ஊஞ்சல் என்றும், நலங்கு என்றும், சம்பந்தி எச்சு—இப்படியாக தமாஷாக பொழுது போகும். உற்றார்களும் நெருங்கிய நண்பர்களும் கல்யாணத்தில் உல்லாசமாக சந்தனம் புஷ்பம், தாம்பூலம் எல்லாம் தரித்துக் கொண்டு பங்கெடுத்துக் கொள்வார்கள்- உற்சாகமாக இருப்பதால் 4 நாள் நீடிக்காதா என்றுஇருக்கும். இப்பொழுது ஒரேநாளில் கச்சேரி, வரவேற்பு, விருந்து, மேளம் தாளம், சாஸ்திரீயமாகச் செய்யும் சுபங்கள் எல்லாம் அடித்துதள்ளுகிறார்கள். எப்பொழுது கல்யாணம் முடியுமென்று இருக்கிறது. நீ சொல்லும் சிக்கனம் இந்த கல்யாணத்தில் எட்டிக்கூட பார்க்கமுடியாது. யாரைக்கேளு, செலவு பதினாயிரம், முப்பத்தினாயிரம், நாற்பதினாயிரம் இப்படியே. நூற்றெட்டு தினுஸு சமையல் வகையறா செய்திருந்தும், ஒருவரும் வயிறாரச் சாப்பிட்டிருக்கமாட்டார்கள். பெரிய கச்சேரி நடக்கும், ஒரு பாட்டாவது ஜனங்கள் காதில் விழாது. சாக்ஷாத் ஸரஸ்வதியே வந்து கானம்ருதமாக வர்ஷிக்கட்டும். அந்த பேச்சும் தடபுடலும் சொல்லியே சாத்தியமில்லை. அதுவும் நாகரீகத்தின் உச்சநிலையை அடைந்துவிட்டதாக நினைக்கும் சென்னையில்தான்! (கலா சொல்வதைக் கேட்டுக்கொண்டே உட்கார்ந்தால் நமக்கு ஒன்றுமே தெரியாது என்றுநினைத்து மேலும்மேலும் குதர்க்கமாகப்பேசுவாள் என்று) "சென்னையைப்பற்றிச்சொல்கிறாயே; வெளியூரில் பிரபல கச்சேரி என்றால் கல்லைவிட்டெறிந்து கலாட்டா செய்கிறார்களே அது வெகு ஒழுங்கோ" என்றாள் பர்வதம் ஆத்திரம் பொங்க.

"அமைதியாயிரு பர்வதம்! வெளியூரைப்பற்றி அப்படிசுலபமாகச் சொல்லிவிடாதே. ஒன்றிரண்டிடத்தில் நீ சொல்வதுபோல் நடக்கலாம். ஆனால், பொதுவாக வெளியூர் கச்சேரிகளில் ஜனங்கள் நன்றாக ரஸித்து அமைதியாகக் கேட்கிறார்கள். பாடகர்களும் அதனால் உற்சாகமாகப் பாடுகிறார்கள். சென்னையில் எவ்வளவோ படித்து நாகரீகமடைந்துவிட்டதாகச் சொல்லுபவர்கள் ஒரு பெரிய கல்யாணத்தில் நடந்துகொள்ளும் விதம் மகா அநாகரீகம். கச்சேரி நடந்தால் விதவிதமாக அலங்கரித்துக்கொண்டு வருகிறார்கள். இரண்டு நிமிஷம் உட்காருவது, பிறகு அங்கு வந்திருக்கும் சிநேகிதர்களிடம் எழுந்துபோய் ஒவ்வொரு நிமிஷம் பேசுவது, செருப்பை ஓசைப் படுத்திக்கொண்டு எழுந்து யாரோ துரத்துவதுபோல் ஓடுகிறது! இது என்ன அநாகரீகம்! பாடகர்கள் உற்சாகம் குன்றி அழுவது! இதற்குமேல் கூட கொஞ்சநேரம் அமைதியாக கச்சேரி கேட்டுவிட்டால் வீட்டுக்காரர்களுக்குப் பிடிப்பதில்லை. சபாவா? காசுகொடுத்து டிக்கெட் வாங்கினமாதிரி உட்கார்ந்திருக்கிறார்களே என்று கேலியோ, முணுமுணுப்போ உண்டாகிவிடுகிறது!—அங்குதான் எல்லாப்பேச்சுகளும் நடக்கின்றன. அலங்காரம் செய்துகொள்ளும்

நேரம்கூட அங்கு இருப்பதில்லை. நான் சமீபத்தில் வெளியூரில் ஒரு வீட்டு கல்யாணத்தில் கச்சேரி கேட்டேன். கச்சேரி செய்தவர் பிரபலபாடகி. ஆண்களும், பெண்களும் ஆரம்பம்முதல் கடைசி வரை வம்புபேசாமல் வெகு அமைதியாக இருந்து ரஸித்தார்கள். சபையோரின் ரஸிகத்தன்மை பாடகியின் உற்சாகத்தைத் தூண்டி கச்சேரி முதல்தரமாக அமைந்தது. சென்னைமாநகரில் அம்மாதிரி நான் கேட்டதே இல்லை. இது வருந்தத்தக்கதுதான்."

"ஆமாம், கலா! நீ சொல்வதுவாஸ்தவம்; ஆனால், எல்லாராலும் கச்சேரி முடியும்வரை இருக்கமுடியுமா? இருந்தாலும்தான் மேலும் மேலும் வருபவர்களுக்கு இடம் வேண்டாமா? நீ கர்நாடகத்தைப் பெருமைப்படுத்துகிறாய். உன்னை எல்லோரும் பிச்சு என்றுதான் சொல்லுவார்கள்."

"கர்நாடகமோ, புதுநாடகமோ இருக்கட்டும்; பிச்சு என்று கூப்பிட்டால் அதனால் குறைவில்லை. வாஸ்தவமான பண்பாட்டிற்குத்தான் நாகரீகம் என்று பெயர். இயற்கையில் இருக்கும் அழகையும் விகாரபடுத்திக்கொள்ளும் விதம் அலங்காரமும், பிறரை அலக்ஷியம் செய்வது, ஆடம்பரம், ரசிகத்தன்மைகுறைவு இவைகளெல்லாம் அனுஷ்டித்து அதுதான் நாகரீகம் என்று சாதித்தால் அந்த நாகரீகம் என்றபெயர் தற்கொலை செய்துகொள்ளவேண்டியதுதான். எளிமை, இனிமை, மரியாதை இவைகள்தான் எந்தக் காலத்துக்கும் ஏற்ற நாகரீகம். பழையகாலத்தில் உள்ள நல்ல கோட்பாடுகளை நம் காலத்திக்கு ஏற்க மாற்றியோ அப்படியேயோ அனுஷ்டிக்கவேண்டும். அம்மாதிரியே மேல்நாட்டு நாகரீகத்திலுள்ள சுவையுள்ள பழக்கவழக்கங்களை — மக்களை மேன்மைப்படுத்தும் முறைகளை — அனுசரிக்கவேண்டும்."

எப்படியோ போகட்டும். நவராத்திரியில் ஒருநாளைக்கு அழைப்பதில் என்ன தவறு? ஒன்பதுநாளும் எல்லோரையும் வரவேற்றால் இவர்கள் எப்பொழுது மற்ற வீடுகளுக்கு போவது?

"அதுவும் சரி கமலா! இந்தமுறை ஒருநாளைக்கு அழைப்பதில் அழைப்பவர்களுக்கு சௌகர்யம்; வருபவர்களுக்குத்தான் கஷ்டம். எழும்பூரில் இருக்கும் ஒரு பெண்ணிற்கு மாம்பலம் சிநேகிதிகளிடமிருந்து எட்டு அழைப்புகள் வந்திருக்கிறது என்று வைத்துக்கொள். ஒவ்வொருவரும் வேறுவேறு தினங்களிலே அழைத்திருக்கிறார்கள். போகிறவளுக்கு 8 வீட்டிற்கும் எட்டு தடவை வண்டிசெலவு செய்துகொண்டு, சிரமப்பட்டு மாம்பலம் போகணும். அதுவும் தற்காலத்தில் பெட்ரோல் பஞ்சம். பணச்செலவு, ஒரேநாளில் மாம்பலம்போய் அழைத்தவர்கள் வீட்டிற்கெல்லாம்போய் மஞ்சள் குங்குமம் பெற்றுக்கொண்டு வருவது எவ்வளவு சுலபம், செலவு குறைவு."

அது சரி, கலா! ஆனாலும் ஒன்பதுநாளும் எல்லோரையும் அழைப்பதும் முடியாது. இரண்டும் கஷ்டமென்றால் என்னவழி?"

"இரண்டும் சிரமம்தான். ஒவ்வொரு குடும்பத்திலும் வயது வந்த பெண்களோ, சகோதரிகளோ, ஓரகத்திகளோ இம்மாதிரி

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்]

திருக்கோளூர்ப் பெண்பிள்ளை

(ஆகஸ்ட் இதழ் தொடர்ச்சி)

10. "முதலடியைப் பெற்றேனோ அகலியயைப்போலே":—

இதுகாறும் கல்லாய்க் கிடந்த அகலிகை சுயரூபம் பெற்றதற்குக் காரணம் ஆதிமுதல்வனின் முதலடியன்றோ? கல்லானது எழிலே உருக்கொண்ட அகலிகை என்னும் மடமங்கையாக மாறியதைக் கண்ட காகுஸ்தகிலகன், குருபுங்கவரைப்பார்த்து, "சுவாமீ! இதென்ன ஆச்சரியம்?" என்றான். "அப்பா, இராமா! இவள் கௌதமரிஷியின் பத்தினி. இந்திரன் இவளைக் கற்பழித்தான். இதை ஞானதிருஷ்டியால் உணர்ந்த இவள் பர்த்தா இவளைக் கல்லாகச் சபித்தார். பிறகு இவளது வேண்டுகோளின்பேரில் உனது பாததூளி பட்டதும் சாபவிமோசனமாகுமெனக் கூறினார். அவ்விதமேயாயிற்று. அதோ! அவரும் வருகிறார்" என்றார். கௌதமரும்வந்தார்; தனது பத்னியை அங்கீகரித்தார். இந்திரன் கைபடக் கல்லானாள்; ராமன் கால் படப்பெண் ஆனாள் அகலிகை!

11. "பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப்போலே":—

மணத்துடன் முளைக்கும் துளசியைப்போல் ஞானத்துடன் பிறந்த ஆண்டாள் பதினான்கு வயதிற்குள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்கிற திவ்வியப்ரபந்தங்களை இயற்றி, மானிடரை ஒருகாலும் மணம்புரியேன், திருமாலையே மணம்புரிவேன் என்று தீரவைராக்கியத்துடனிருந்தாள். இவர் தந்தையாகிய பட்டர்பிரானும் இவருடைய ஞானத்துக்கும் வைராக்கியத்திற்கும் உகந்து ஸ்ரீரங்கத்துக்கோயிலில் வீற்றிருக்கும் ஸ்ரீஅரங்கநாதன் கட்டளைப்படியே இத்தகைய மானிடமாதை பல்லக்கிலேற்றி ஸ்ரீரங்கமாநகரம் சேர்ந்து, (தென்னரங்கன் தொழும்தேசியள் வந்தாள்; என்று பல பிருதுகளைச் சொல்லிக்கொண்டுபோய்) அழகியமணவாளருக்குக் கன்னிகாதானம் செய்துவைத்தார். உபதேசரத்தினமாலையில்,

"அஞ்சு குடிக்குஒரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து."

என்ற பாசுரம் இக்கருத்தைத் தெளிவாக்குவதைக் காணலாம்.

12. "எம்பெருமானென்றேனோ பட்டர்பிரான்போலே":—

பிறந்ததுமுதல் எம்பெருமானிடத்திலே மாறாத பற்றுதலுடன் புஷ்பகைங்கரியம் செய்துகொண்டு நிகரற்ற பக்தியுடன் இருந்ததால் இவருக்கு விஷ்ணுசித்தரெனப் பெயர்வழங்கலாயிற்று. மதுரையில் அரசாட்சிசெய்துவந்த ஸ்ரீவல்லபதேவன் தன் புரோகிதராகிய செல்வநம்பியைப் பார்த்து, "யாரை அண்டினால் நித்தியானந்தமாகிய மோட்சத்தையடையலாம்?" என வினவ, அதற்கு

செல்வநம்பி "நீர் உண்மையாய் மோட்சத்தை யடையவேண்டு மானல் சகல வித்வான்களையும் வரவழைத்து சபைக்கூட்டி தனத்தை மூட்டையாகக் கட்டி, அப்பொற்கிழியை ஓர் கம்பத்தில் உயரக்கட்டிவிடும். யாருடைய வாக்குக்கு பொற்கிழி தானுகத் தாழ்ந்து வருகிறதோ அதுவே உண்மையான தத்துவம்" என்றார்.

உடனே அரசனும் அப்படியேசெய்ய, விஷ்ணுசித்தரும் அவ் விடம் சென்று ஸ்ரீபகவத்கீதாசாரியனே சத்யமாகிய பரம்பொருள்; அவரே வேதவிழுப்பொருளாகிய எம்பெருமான்; அவரே ஆதிமுதற் கடவுள்; அவரடி பணிந்து உய்வதே மோட்சத்திற்குச் சிறந்த மார்க்கம் என்று வாதித்தார். உடனே தனமுடிப்பும் இவரண் டையில் தானுகத் தாழ்ந்துவந்தது. அரசன் இவரை வழிபட்டு குரு வாக எண்ணிப் பட்டத்து யானைமீது ஏற்றி ஊர்வலம் வந்தான்.

பாண்டியன் கொண்டாடப் பட்டபிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

இத்தகைய பரமபக்தன் பவனிவருவதைக்காண வெகு ஆவ லுடன் ஸ்ரீமன்நாராயணனும் கருடாரூடராய் ஆகாசத்தில் வந்து நிற்க, அவரைக்கண்ணுற்ற பட்டர்பிரானும் யானைமீதிருந்த மணி யையே தாளமாகக் கொண்டு வேதத்துக்கு 'ஓம்' என்பதுபோல் திவ்யப்ரபந்தத்திற்கு பல்லாண்டென்று சொல்லப்பட்டும் மங்கள கரமான பல்லாண்டு பாடி மங்களாசாஸனம் செய்தார்.

13. ஆராய்ந்து விட்டேனே திருமழிசையார்போலே":—

இவர் சகல மதங்களையும் அலகலகாய் ஆராய்ந்து, விஷ்ணு மதமே சம்மதமென்று விரும்பி,

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்—யான் முகமாய்
அந்தாதி மேலிட் டறிவித்தேன் ஆழ்பொருளைச்
சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து"

என்றும்,

"சாக்கியங் கற்றோம் சமணங் கற்றோம் சங்கரனார்
ஆக்கிய வாகமநூ லாராய்ந்தோம்—பாக்கியத்தால்
செங்கட் கரியானைச் சேர்ந்தியாந் தீதிலோம்
எங்கட் கரியதொன் றில்"

என்று தன்வாக்கினுல் சொல்லிக்கொண்டு நான்முகன்திருவந்தாதி யும் திருச்சந்தவிருத்தமும் இயற்றி உலகத்தை வாழ்வித்தார்.

14. "அவன் சிறியனென்றேனே ஆழ்வாரைப்போலே:—

நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழி என்னும் திவ்யப்ரபந் தத்தில் பகவானுடைய பெருமையை வெகுவாய் விரித்துப் பேசி யுள்ளார். பகவான் தன்னை உள்ளன்புடன் நேசித்த யசோதைப் பிராட்டியைப்போலுள்ளவருக்குக் கட்டவும் அடிக்கவும் எளிய

னையும் சிறியவனையும் இருப்பவன் என்பதைப் பலதரம் பேசியும் மூவாறு மாதம் மோஹித்தும் இருக்கிறார்:

"பத்துடைய யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய
வித்தகன் ; மலர்மகள் விரும்பும் நமரும்பெற லடிகள்
மத்துறு கடைவெண்ணை களவினில் உறவிடை யாப்புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந் தேங்கிய வெளிவே!"

தவிரவும் இவர் அவதரித்ததும் அருகிலிருந்த புளியமரப் பொந்தில் ஏறியமர்ந்து யார் வந்து வினவியபோதிலும் வாய்திறவாமலும் மௌனமாயும், உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனே என்றும் இருந்தார். இவர் சிஷ்யராகிய மதுரகவிகள் வந்து இவர் எதிரே நின்று "சுமாமீ! செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் அது எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று கேட்க, அதற்கு ஆழ்வார் "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்; எனப்பதிலுரைத்தருளினார்.

அசித்தாகிய சரீரத்திலே அணுவான ஆத்மா ஸம்பந்தித்தால் அது எதை அனுபவித்து எங்கிருக்கும்? என்ற கேள்விக்கு, அச்சரீரத்தைச் சார்ந்த சுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டு அதனையே ஆச்ரயித்திருக்கும் என்று பதிலுரைத்தார்.

"யாருமோர் நிலைமையனென வறிவரிய வெம்பெருமான்
யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்"

என்றதனால் "அவன்சிறியன் என்றேனோ ஆழ்வாரைப்போலே" என்றாள் திருக்கோளூர்ப் பெண்மணி.

குஷ்டம் ★ வெண் குஷ்டம்

LEPROSY ★ LEUCODERMA.

இலவச பரீட்சை, சிகிச்சை செய்யப்படும்.

கடிதங்கள் உடனே கவனிக்கப்படவேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்களை புரிந்துகொள்ள முடியாது. அதனால் அவை திருப்பி அனுப்பப்படும்.

தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஆப்பிரிக்காவிலிருந்து பீஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & Co., (Regd)

GOPALAPURAM. (E. G. Dt.) TANUKU, M. S. M.

நம்புவீர்களா ?

ஸ்ரீமதி-மங்கா

என் சினேகிதை மிஸ்ஸஸ். மெக்கேன்ஸீ என் மற்ருெரு நேசியான மிஸ். பெட்ருஷியாவையும் கூட்டிக்கொண்டு சாயந்திரம் வந்தாள். மூவரும் தமாஷாக அன்று பேசலானேம்.

மிஸ். பெட்ருஷியா ஆரம்பித்தாள்:—"போன வாரத்தில் நமது நேசி இந்தியமணவாழ்க்கையைப்பற்றிவேடிக்கையாகச் சொன்னர். ஆனல், மிஸ்ஸஸ். மெக்கன்ஸீ! உங்கள் தாம்பத்திய வாழ்க்கையைப் பற்றி இன்று நீங்கள்தான் கூறவேண்டும். எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. ஆகையால், மணவாழ்க்கையைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது."

மிஸ்ஸஸ். மெக்கேன்ஸீ:—"எனக்கு எங்கள் கல்யாணவிஷயம் சொல்லுவதென்ருல் ரொம்ப ரொம்ப பிடிக்கும். நாங்கள் எப்படி நினைக்கின்ருேம் என்ருல், வாழ்க்கை ஓர் புஷ்பத்தோட்டி. அந்த தொட்டியிலிருக்கும் செடியே மணவாழ்க்கை. அந்த செடியில் பூக்கின்றபூவே உண்மை அன்பு அல்லது காதல். பூக்காத செடியை யார் வாங்க விரும்புவார்கள்? அதுபோல, அன்புபூத்த மண வாழ்க்கையை நாங்கள் கோருவோம். உண்மை அன்பினல் ஒன்று பட்ட ஆண்பெண் இருவரையும் அவர்கள் மணவாழ்க்கை பரிசுத்த பரிபூரண இன்பத்தைக்கொடுக்குமாறு ஆசீர்வதிப்போம். அன்புக்கும், சுகத்துக்கும் மணம் புரிவார்கள் எங்கள் மக்கள். மணம் அடைந்த பின்பு, இருவரும் ஒருவரை ஒருவர் உண்மை ப்ரேமையுடன் நேசிக்கவேண்டும்.

நீங்கள் நினைப்பதுபோல, சுதந்திரமாய் நாங்கள் திரிவதால், நாங்கள் கற்புக்கு முக்கியத்வம் கொடுப்பது இல்லை என்பது தப்பிதமான அபிப்ராயம். எங்களில் ஆண்பிள்ளைகள் அவரவர் காதலிகளை முழுமனதுடன் நம்புவார்கள். அவர்களும் நம்பிக்கைத் துரோகம் செய்யாமல், தனியே விடப்பட்டாலும் தங்கள் முதற் காதலுக்கும் கற்புக்கும் பங்கம் வராமல் பாதுகாப்பார்கள். எடாவடமாக ஒரு போக்கிரி, ஒருவன் மனைவியை வித்தியாசமாக நடத்த முற்பட்டுவிட்டானனல்,அந்த ஆங்கில மனைவியின் கோபக்கனலையும், சீற்றத்தையும் சொல்லிமுடியாது.

இந்தவிதமாக ஓர் ஆண்பிள்ளை அந்த லேடியின் கற்பை அவமதித்தான் என்ற விஷயம் காட்டுத் தீபோல பரவிவிடும். உடனே அத்தனை பெண்களும் ஒன்றுகூடி அந்தப் போக்கிரி மனிதனைக் கண்டனம்செய்து, ஏசிப்பேசி, பிறகு பலவாறு தேற்றுதலை அந்தப் புண்பட்ட லேடிக்குக் கூறிவிட்டு, பெண்கள் எல்லாரும் செல்லுவார்கள். பிறகு அந்தப் போக்கிரிமனிதன் சமூகத்தின் நடுவில் தலைகாட்டமுடியாது செய்துவிடுவார்கள் சமூகப்பெண்கள் அனைவரும். பெண்ணேடு பெண்கள் சேருவார்களே யொழிய, ஆத்திரம்

படைத்த ஒரு ஆண்மகனுக்காகப் பெண்கள் அவனுக்குப் பரிந்து பேசமாட்டார்கள்.

எங்களில், பெண்களின் சுயமரியாதைக்கு மதிப்புண்டு. பெண்களின் மெல்லிய உணர்ச்சிகளுக்கும், மிருதுவான இதயத்திற்கும், ஆர்வமுள்ள மனத்திற்கும் கவனம் செலுத்துவோம். பெண்களை சந்தோஷதேவதைகளாக எங்கள் ஆண்பிள்ளைகள் நினைக்கிறார்கள். மனிதனுக்கு சந்தோஷமே முக்கியமானதாலும், அந்த சந்தோஷத்தைப் பெண்களே கொடுப்பவர்களாதலால், எங்கள் ஆண்பிள்ளைகள் முதலில் சந்தோஷதேவதையான பெண்ணைத் தேடிப் பிடித்து, தனக்கென்று ஏற்படுத்திக்கொண்டு, நாலுபேர் முன் அவளை ஏற்றுக்கொண்டு பிறகு வீட்டைத் தேடுவார்கள்.

எங்களில் வீட்டின்தெய்வம் பெண். பெண் எதற்கு? அவளுக்கும், அவளை அடைந்த கணவனுக்கும் சந்தோஷத்தைக் கொடுப்பதற்கே! எங்களில் சந்தோஷமென்பதை ஒருவரே அனுபவித்தல் என்பது கிடையாது. எங்கள் கவி அரசர் (Byron) பைரன் சொன்னதுபோல, சந்தோஷம் இரட்டைப்பிறவி. அதைப் பங்கிட்டேயறிவோம் நாங்கள். சந்தோஷத்தைக் கொடுப்பது யார்? பிரேமைகொண்ட மனைவி! அதனால் மனைவிக்கு ஓர் தனிப்பட்ட சிறப்பை அளித்துள்ளார் எங்கள் நாட்டார்.

மனைவி என்பவள் யார்? பல ஆண்பிள்ளைகள் தன்னை மணக்க முன்வந்தும், பலரையும் புறக்கணித்துவிட்டு, தன்னையே காதலித்து மணந்துகொண்டவள் அன்றோ அந்த மனைவி, என்று நினைப்பான் கணவன். பிறகு தன் (Weaknesses) குறை குற்றங்களையெல்லாம் பாராட்டாமல், வீட்டில் எத்தனை பாடுபடுகிறான் தன் மனைவி என்று பெருமிதப் பெருமையடைவான் கணவன். குழந்தைகளையும் கவனித்துக்கொண்டு, வீட்டு வேலைகளையும் கெட்டிக்காரத்தனமாய்ப் பார்த்துக்கொண்டு, ஞாயிறில் மாதாகோவிலுக்கும் போய்க்கொண்டு, கிழிந்த உடைகளையும் செப்பனிட்டுக்கொண்டு, கணவன் வந்ததும், அவனுடன் நவரஸமாகப்பேசி, உற்சாகமூட்டி, தேற்றி, போற்றி, அவனுக்கு (Home) வீடு என்பதையே இந்திரலோகமாக அமைத்திடுவாள்.

இத்தனை இன்பத்தையும் பருகிய அந்தக் கணவனும், சிறிதும் நன்றிகெட்ட கணவனாக இராமல், அவளுக்கும் தன் நன்றியறிதலையும், பெருமையையும் கூறுவான். தவிர சொல்லுவான், "அன்பே! நான் எங்கு சென்றாலும், மாளிகையானாலும் அரண்மனையானாலும், அற்புத ஆற்றங்கரையானாலும், நீ வைத்திருக்கிற வீட்டைப்போல் உலகில் ஓர் இடமும் இல்லை. இனிய இன்பவீட்டைப்போல் வேறு இடம் உலகில் உண்டா? (Home sweet home; there is no place like home)" இதைக் கேட்கும் மனைவியும் நாள் முழுவதும் உழைத்த வேலையின் அலுப்பை நொடிப்பொழுதில் மறந்து, உற்சாகத்தில் ஊன்றிப்போவாள்.

நண்பர்கள் இவனது மனைவியின் செயலை வியந்து கூறி, இப்படி வாய்க்கப்பட்ட தம்பதிகளை கடவுள் நல்ல நிலையில் என்றும் நிலைத்து வைக்கவேண்டுவதாகக் கூறுவார்கள். கணவனும் சந்தேகப்

பேயாக மாறாமல் பெருமை யடைந்து, சந்தோஷமாய் சிரித்துக் கொண்டே நண்பர்களுக்கு வந்தனங்கூறுவான். நண்பர்களும் கெட்டஎண்ணங்கள் ஒன்றும் இல்லாதவராய் வீடு செல்வார்கள். மாசில்லாத கற்பரசி தன்மனைவிஎன்பதைக் கணவனும் அறிந்தவன்; அவன் நண்பர்களும் அறிந்தவர்கள். மறுநாளே தங்கள் மனைவியிடம் சகஜமாகப்பேச அவன் வருவதும் வழக்கந்தானே!

மனைவியும், தன் கணவனை, பால்யமுதல் காதல்தெய்வமாக அவனை எண்ணி, பலநாள் காத்திருந்து பின்பு அவனை அடைந்து, அவனைத் தன் உயிர்நிலையாக வைத்துள்ள மனைவி, கற்பை இழப்பது அபூர்வம். கணவன் இறந்தபிறகு கருப்பு ஆடை அணிந்து, அவனையும், தங்கள் காதல் நாட்களையும், மணவாழ்க்கையையும் எண்ணி எண்ணி வருந்தும் ஆங்கில விதவைகளும் அநேகர்.

புதியபுதிய அலங்கார வஸ்துக்களை மனைவிக்கு வாங்கிக் கொடுத்துப் பூரிக்கும் கணவன்மார்கள் இருப்பது சர்வ சாதாரண விஷயம். சரிநிகராய் இருவரும்விவாதித்துப் பேசுவார்கள். எதிலும் சுதந்திரம் உண்டு. நியாயமான எதையும் செய்துவிடலாம். ஆனால், சுதந்திரம் இருந்தும், ஆபத்துக்கள் வரினும், மனைவியின் ப்ரேமை கணவனையே சுற்றிச்சுற்றி வட்டமிட்டு ரீங்காரம்செய்வதைக்கண்டு களிப்பெய்துவான் கணவன். பலஅழகான ஸ்திரீகளுடன் பழகினும், தன்மீதே உயிர்வைதிருக்கும் தன் காதல்கணவனைக் கண்டு சந்தோஷத்தில் மெய்மறந்து, தன் பாக்கியத்தையும் வியந்து, கடவுளை மனதாரத்தொழுவாள் அவன் மனைவி.

அவனன்றி ஓர் இன்பத்தையும் நுகரப் பிரியப்படாள் மனைவி. அவளன்றி ஓர் சுகத்தையும் அடையப் பிரியப்படான் கணவன். ஆனால், சிநேகிதர்களும் உண்டு. ஆனால், அவர்கள் யாவரும்சிநேகிதர்களேயன்றி, 'காதல் கோவிலுக்கு' வர ஏற்றவர்கள் அல்ல.

பிறகு, இந்த மனமொத்த காதல் மணவாழ்க்கையில் வரும் வர்சனையே காதல்—மணத்தின்—அரும்பிலிருந்து கிடைக்கும் குழந்தைகள். வாழ்க்கையே புஷ்பத்தொட்டி. செடியே மணவாழ்க்கையின் ஆரம்பம். பூவே காதல். பூத்தால், தொட்டியை சொந்தமாக்கிக் காதல் கொள்ளுவார்கள். பிறகு பூக்கும் பூக்களின் மணமே குழந்தைகள். புஷ்ப மணம்போல், குழந்தைகளின் ஆரவாரம் தெருவோரைக் கூவியழைக்கும்.

எங்களில் கற்பு உண்டு. சத்தியம் உண்டு. தூய்மையுண்டு. ஆனால் சுகமும், அன்பும் இருபாலாருக்கும் சரிஎடையாக உண்டு! ...நாழியாகி விட்டது. என்கணவருக்கு டீ கொடுக்கவேண்டும். நான் டீ கொடுத்தால்தான் அவருக்கு ருசியாக இருக்கும். வரட்டுமா?"

விடைபெற்றுச்சென்றனர் நேசிகள். உங்கள் மனோபாவம் எப்படி இருக்கிறது? அவர்களது சதாயமுத்தைப்பற்றிக் கேட்டதை நம்புவீர்களா?

ஜகன்மோகினி	இந்தியா, ஸிலோன்.	பர்மா.	வெளிநாடு
தனிப் பிரதி	அணா 4.	0—4—6.	0—5—0
வருடச் சந்தா	3-0-0.	3—8—0.	3--12--0

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அமாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சித்தம்மையும் நானும் மாற்றி மாற்றி முறையெடுத்துக்கொண்டு வெளியூர்களுக்குப் போய்வந்தோம். தஞ்சை ஜில்லாவிலுள்ள நீடாமங்கலமும் அங்கிருந்து 2, 3 மைல் சுற்று வட்டத்திலுள்ள ரிஷியூர், வைகளத்தூர், முல்லைவாயில், பூவனூர் முதலான கிராமங்களும் என் குடும்பத்துப் பெரியோர்களின் பூர்விகர் ஊர்கள். அந்த வருஷம் கோடையில் என் தாயாரின் தங்கை புதல்வன் நடராஜனுக்கும் வைகளத்தூர் கிராமத்தில் காமாக்ஷிக்கும் விவாகம் நடந்தது. நீடாமங்கலத்திலேயே ஒரு சிறு மனைக்கட்டு வாங்கி அந்த ஊர் விச்வநாத விசாலாக்ஷியம்மன் கோவிலுக்கு சமீபத்தில் என் தாயார் விருப்பத்தின்படி ஒரு வீடு கட்டப்பட்டது. அங்கு ஒரு மாதம் இருந்து காவிரிஸ்நானம் செய்துவிட்டு சென்னைக்குத் திரும்பினோம். தெற்குமாடவீதியில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக்கொண்டு என் பெற்றோர்கள் குழந்தைகளுடன் குடியேறினார்கள்.

1916-ஆம் வருஷம்

சென்னை கவர்னராயிருந்த பெண்ட்லந்து தம்பதிகள் ஆச்ரமத்தில் மிகுந்த அபிமானத்துடன் பாடசாலையையும் ஆச்ரமத்தையும் வந்து பார்வையிட்டனர். யுத்தசம்பந்தமாக கவர்மெண்ட் ஹௌஸில் நடக்கும் சம்பவங்களில் ஆச்ரமப் பெண்களும் பங்கெடுத்துக்கொள்வது வழக்கம். ஒரு சமயம் லேடி பெண்ட்லண்டு அவர்கள் முன்னால் தெரிவிக்காமலே ஒரு நாள் மாலை சுமார் 6 மணிக்கு இருட்டும் சமயத்துக்கு ஆச்ரமத்துக்கு வந்துவிட்டார். கவர்னர் பெருமாட்டி அப்படி திடீரென்று வருவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அப்போது ஆச்ரமத்தில் காந்த தீபங்கள் கூட கிடையாது—மண் எண்ணெய் விளக்குகள்தான். ½ மணி நேரம் இருந்து பேசிவிட்டுப் போனார்கள். மிஸஸ் பெட்போர்ட் (Mrs, Bedford) என்பவர் மிஸ் விஞ்சுக்கு மிகவும் சிநேகம். அவர் அடிக்கடி ஆச்ரமத்துக்கு வந்து மாணவிகளுடனும் என்னுடனும் பேசிப்போவது வழக்கம். ஒரு சமயம் ஆச்ரமத்துச் சிறுபெண்களுக்கு ஒரு பொம்மை (doll) யும் அதற்கு ஒரு சிறு கைவண்டியும் பரிசளித்தார். அந்த பொம்மைக்கு ஐடா (Ida) என்னும் அவர் பெயரையே வைத்து மாணவிகள் விளையாடுவது வழக்கம். ஒரு சமயம் அவர் 75 ரூபாய் பணம் கொடுத்து மாணவிகளை மகாபலிபுரத்துக்கு அழைத்துப்போக ஏற்பாடு செய்தார். ஒரு (Cabin Boat) அமர்த்திக்கொண்டு மாணவிகளை 2 நடையாக அழைத்துப் போனோம். முதல் நடையில் சித்தம்மைபோய்வந்தார். அவர்கள் பிரயாணம் சௌகரியமாக இருந்தது. இரண்டாவது நடையில் மிஸ் பிரேஜரும் நானும் போனோம். ஐஸ்ஹௌஸுக்கு சமீபத்திலேயே படகு ஏறினோம். மகாபலிபுரத்திலுள்ள கல்வெட்டுக்கள், ரதங்கள், தீபஸ்தம்பம் எல்லாம் பார்த்துவிட்டு சமுத்திர ஸ்நானமும் செய்துவிட்டு ஒரு ஞாயிற்றுக்கிழமை பகல் படகேறினோம். மறுநாள் திங்கள் பாடசாலையுண்டு. காலை 6.மணிக்கே சென்னை வந்துசேரவேண்டியது. ஆனால் நாங்கள் படகில்

ஏறிப்புறப்பட்டதுமுதல் ஒரே புயற்காற்றும் மழையும் ஆரம்பித்துவிடா,
மலிருந்ததால் கனலில் ஜலம் அதிகமாகி படகு பெரிய Cabin படகாத
லால் மாலுமிகளுக்கு அதைத்தள்ள முடியாமலும் இரவு முழுவதும் குளி
ரில் கஷ்டப்பட்டதாலும் மறுநாள் திங்கட்கிழமை இரவு 8-மணிக்குத்தான்
சென்னை சேர்ந்தோம். இதற்குள் எங்கள் சித்தி கவலைப்பட்டுக்கொண்டு
ஏழெட்டு ஆட்களுடன் சுமார் 5 மைல் கால்வாய்க் கரை வழியாகவே
நடந்துவந்து பாப்பான்சாவடிக்கு சமீபத்தில் வந்துகொண்டிருந்த எங்க
ளுடன் படகில் சேர்ந்துகொண்டார். அவருடன் வந்த ஆட்களும் கூட
உதவி செய்து ஏலேலோ அயிலேலோ பாடிக்கொண்டு வந்து சேர்ந்
தோம். இது நடந்தது அக்டோபர் மாதம்.

நவம்பர் 22, 23 தேதிகளில் சென்னையில் அதுவரைக்கும் இல்
லாத ஒரு சுழற்காற்று அடித்து மழைபெய்து மிகுந்த சேதத்தை
உண்டாக்கிவிட்டது. சுழற்காற்று முதல்நாள் வடக்கிலிருந்து ஆரம்
பித்து கொஞ்சம்கொஞ்சமாக கிழக்குத்திக்கிலிருந்தும் தெற்கிலிருந்
தும் அதிவேகத்துடன் அடித்தது. ஐஸ்ஹவுஸ் கட்டிடம் முன்பக்
கம் அரைவட்டமானது. 2-ஆவது மாடி தாழ்வாரத்தில் என் அறை
தெற்கில் இருந்தது. முதல்நாள் எல்லாம் வடக்குப்பக்கமிருந்த தாழ்
வாரங்களில் யாரும் நிற்கக்கூடமுடியாது—அழகான பலநிறக்கண்
ணாடிகள், ஜன்னல்களின்மேலே இருந்தவை, புயலின் வேகத்தினால்
சுக்குநூறாக ஒடிந்து விழுந்துவிட்டன. சில ஜன்னல் கதவுகளும்
விழுந்துவிட்டன. அப்போதெல்லாம் தெற்குப்பக்கமிருந்த என்
அறை ஹார்பரைப்போல அமைதியாயிருந்தது. நானும் தைரியமாக
இரவில் வழக்கம்போல படுத்துக்கொண்டேன். 23-ந்தேதி அதி
காலை சுமார் 3 மணிக்கு சுழற்காற்று தெற்குப்பக்கத்திலிருந்து
அடிக்க ஆரம்பித்துவிட்டது. மூடியிருந்த இலைக்கதவு ஜன்னல்கள்
வழியாக மழை உள்ளேஅடித்து மேஜை நாற்காலிகள் புஸ்தகங்கள்
எல்லாம் ஒரே தொப்பமாய் பிரளயமாகிவிட்டன. என் படுக்
கையை எடுத்துக்கொண்டு புயற்காற்றை எதிர்த்துக்கொண்டு
அறையைவிட்டு வெளியில்வர முடியவில்லை—அந்த 2 நாட்களும்
கொந்தளித்துக்கொண்டிருந்த கடல்காட்சி, தெருவில் தரைக்குமேல்
1 அடி உயரத்திலேயே மழைஜலம் புயற்காற்றினால் வேகமாக அடித்
துக்கொண்டு போகப்பட்ட காட்சியெல்லாம் இயற்கையின் முரட்
டுத்தனத்தை அறியும் சந்தர்ப்பத்தை அளித்தன.

அந்த வருஷம் கோடைலீவில் என் பெற்றோர்கள், சகோதரி
களுடன் பல இடங்கள் போனேன். சிதம்பரம், திருச்சி, ஸ்ரீரங்கம்,
திருவானைக்காவல் இந்த இடங்களில் இரண்டிரண்டு நாட்கள்
இருந்துவிட்டுப் பிறகு திருநெல்வேலியில் 1 வாரம் தங்கினோம்.
அதன்பிறகு பாபநாசத்தில் கோவிலுக்கு அருகிலுள்ள ஒரு வீட்டில்
15, 20 நாட்கள் தங்கி நதிஸ்நானம், அருவிஸ்நானம் இவற்றை
சந்தோஷமாக அனுபவித்தோம். அதன்பிறகு திருக்குற்றாலத்தில்
சித்ரசபைக்குப் பின்பக்கத்தில் இலஞ்சி முத்துக்குமாரசாமிபிள்ளை
யவர்களின் பங்களா ஒன்றில் 10 நாள் இருந்து சம்பா அருவி, தேன்
அருவியெல்லாம் பார்த்தோம். தேன் அருவி என்பது மகோன்னத
மான செங்குத்தான பாறைகளிலிருந்து விழும் ஒரு அருவி. மேல்
பாகமும் பெரும் பாறைகளால் கூரைபோல மூடப்பட்டிருக்கிறது.

அந்தப்பாறைகளில் யாவராலும் அண்டமுடியாத உயரத்தில் தேனீக்களின் கூடுகள் பெரிது பெரிதாக இருக்கின்றன. வெள்ளக் காலத்தில் தேனருவியை அண்டவே முடியாது. குற்றாலத்தில் "சாரல்கட்டி" விட்டால் தூவானம்போலச் சிறு தூற்றலாக மழை அடிக்கடி பெய்துகொண்டிருக்கும். அதில் நனைந்தாலும் உடம்புக்கு அது சௌக்யமே. சம்பா அருவி விழுந்தோடும் ஒருவாய்க்கால் ஜலம் 4, 5 அடி ஸ்படிகம்போல தெளிவான ஜலம் ஸ்நான பானத்துக்கு அம்ருதமாயிருக்கும். பிறகு ஐந்தருவியென்னுமிடத்துக்குப்போய் ஸ்நானம் செய்தவந்தோம். சித்ரசபையில் நடராஜர் தரிசனம், குற்றாலேச்சுவரர், குழல்வாய் அம்மையின் தரிசனம், ஸ்ரீ லலிதாம்பிகையின் ஸ்ரீசக்ரபூஜை யெல்லாம் விசேஷமானது. ஆக, அந்த வருஷம் கோடைவிடுமுறையை மிகவும் சந்தோஷமாக அனுபவித்துவிட்டுத்திரும்பி ஜூன் கடைசியில் ஆச்ரமத்துக்குவந்து பாடசாலை வேலையாரம்பித்தோம்.

என் சகோதரி சாவித்திரியின் கணவர் காப்டன் துரைசாமி உலகயுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர் ஒருமாதம் லீவு எடுத்துக்கொண்டு ஜூலை 7-ந்தேதி வந்து சாவித்திரி குழந்தைகளுடன் பெங்களூரில் போய் 1 மாதம் அமைதியாக இருந்துவிட்டுப் பிறகு ஆகஸ்ட் 10-ந் தேதி சென்னைவந்து அன்று இரவே புறப்பட்டு பம்பாய்போய் அங்கிருந்து இத்தாலிக்குப் போனார்.

என் தங்கை ஸ்வர்ணம் அந்த வருஷம் கெமிஸ்ட்ரி என்னும் பாடம் எடுத்துக்கொண்டு பி. ஏ. வகுப்பில் சேர்ந்தாள். என் குஞ்சியம்மாள் புதல்வன் நடராஜன் பி. ஏ. முடித்துவிட்டு மங்களூரில் ஒரு ஸ்கூலில் வேலை கிடைத்துப் போனான். என் பெற்றோர்களும் அந்த வருஷம் அக்டோபர்மாதத்தில் குடகு, தலைக்காவிரி, மங்களூர் முதலான இடங்களுக்குப் போய்வந்தார்கள். சாவித்திரியும் நானும் ஒரு முஸ்லிம் உபாத்தியாயரிடம் ஹிந்துஸ்தானி கற்றுக்கொண்டோம். முதல் 4 வகுப்புப்புத்தகங்கள் முடித்துவிட்டு Compul-sory Test பரீக்ஷைக்குப்போய் அதில் தேர்ச்சி யடைந்தேன். அதற்கு முன்பே ஆச்ரமத்தில் ஆந்திர ஜில்லாக்களிலிருந்து அநேகம் தெலுங்குப்பெண்கள் வந்துசேர்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு சுத்தமாக தமிழே தெரியாது, ஆங்கிலமும் தெரியாது. அவர்களது கடிதப்போக்குவரத்தெல்லாம் கவனிக்கவேண்டும். அவர்களுடன் பேசியாகவேண்டும். ஆகவே, ஆச்ரமம் ஆரம்பித்தவுடனேயே ஆங்கில-தெலுங்கு "ஒக்கபிலேசி" முதல் மூன்று புஸ்தகங்கள் வாங்கிப் படிக்கவும் தெலுங்குமாணவிகளுடன் பேசவும் பழகிக்கொண்டேன். பாலக்காடு திருவனந்தபுரம் கொச்சி முதலிய மலையாள தேசங்களிலிருந்து அநேகம் பெண்கள் அவ்வப்போது வந்துசேர்ந்தனர். அவர்களுடைய கடிதங்களைப்படிப்பதற்கு மலையாளம் தெரியவேண்டும். அவர்கள் பேசுவது தமிழ்பாஷைதான். அதை மலையாள எழுத்தில் எழுதுவார்கள். ஏற்கனவே சில வருஷங்களுக்கு முன் ஒரு விடுமுறை காலத்தில் கற்றுக்கொண்ட மலையாள எழுத்துக்களை எழுதிப்பழக்கிக்கொண்டு மலையாளத்தில் எழுதப்படும் கடிதங்களைப் படிக்கத்தெரித்துகொண்டேன். ஆக, பிரதினை

மும் மாணவிகளுக்கு வரும் கடிதங்கள், அவர்கள் எழுதும் கடிதங்கள் இவற்றைப் பார்வையிடுவது இது ஒரு பெரிய வேலை.

1914-ஆவது வருஷத்தில் M. A. க்குப் படிக்கவேண்டுமென்று ஆவலுடன் அதற்கு வேண்டிய சில புஸ்தகங்கள் எல்லாம் வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். ஆனால், பாடசாலை வேலையும், ஆச்ரம வேலையும் மிகுதியாயிருந்ததால் எம். ஏ. க்குப் படிப்பதற்கு அவகாச மில்லாமற் போயிற்று.

ஆரம்பத்தில் ஒருசமயம் பெற்றோர்களில்லாத ஒரு தெலுங்குப் பெண்ணுக்கு, அவள் சகோதரியும், சகோதரிகணவரும் கடிதங்கள் எழுதுவது வழக்கம்--அந்தக்கடிதங்களை நான் பிரித்துப்பார்த்துவிட்டு அவளுக்குக் கொடுப்பதைப்பற்றி அவள் கடிதத்திலிருந்து தெரிந்துகொண்டு அவள் சகோதரிபுருஷன் சென்னைக்கு வந்து என்னிடம் பேசி, அவர் கடிதங்களை நான் பிரித்துப்படிக்கக்கூடாது என்று ஆக்ஷேபித்தார். ஆச்ரமப்பெண்களுக்கு சில விஷமக்கடிதங்களும் சில சமயங்கள் வருவதுண்டென்றும் அவற்றை நான் படித்துவிட்டு அவர்களிடம் காட்டாமலே கிழித்தெறிந்துவிடுவதென்றும் இன்னும் பலகாரணங்களுக்காகவும் வரும் கடிதங்களை நான் பிரித்துப்பார்த்தே கொடுக்கவேண்டுமென்றும் அது அவருக்கு இஷ்டமில்லாவிட்டால் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விடலாமென்றும் நான் கண்டிப்பாகச் சொன்னபிறகு அவர் கோபம் அடங்கி சமாதானமாகப்போனார்.

தெருவில் போகும்போது ஒருவரையொருவர் பெயர் சொல்லிக்கூப்பிட்டுப் பேசிக்கொண்டு போவார்கள்—சில சமயங்களில் சற்று தூரத்தில் இவர்களைப் பின்தொடரும் விஷமிகள் அந்தப் பெண்களின் பெயருக்கு மேல்விலாசம் எழுதி தாறுமாறாக விஷமக் கடிதங்கள் எழுதுவார்கள். "அன்று உன்னை கடல்கரையில் சந்தித்துப் பேசினது சந்தோஷமாயிருந்தது; இன்றும் 6 மணிக்கு வந்து என்னை சந்திக்கவும்" என்பது போன்ற கடிதங்கள், அவர்கள் ஏற்கனவே சந்தித்ததுபோன்ற விஷயத்தை நான் நம்பவேண்டும்போன்ற பாவனையில் எழுதுவார்கள். அவற்றையெல்லாம் நான் ஒரு சிறிதும் நம்புவதில்லை. அந்தக்கடிதங்களை அந்தப்பெண்களிடம் காட்டுவதேயில்லை—அப்படிப்பட்ட கடிதங்களை அவர்கள் படித்து மனது சங்கடப்படக்கூடாது என்பது என் அபிப்பிராயம். அவர்கள் போக்குவரத்தைச் சற்று அதிகமாகக் கவனிப்பேன். ஒரு தவறுமில்லையென்று தெரிந்தவுடன் கடிதங்களைக் கிழித்துவிடுவேன். நிலையத்தில் சேரவேண்டுமென்று வந்த விண்ணப்பங்கள் எத்தனையோ அத்தனைக்குமேலேயே விவாக விண்ணப்பங்கள் அந்தக் காலத்தில் வருவது வழக்கம். விஷமமல்லாதவைகள் என்று தோன்றும் சில கடிதங்களுக்குமட்டும் "முடியாது" என்று பதில் எழுதுவேன். மற்றவைகளுக்கு பதிலெழுதுவதும் கிடையாது.

அந்தக்காலத்தில் கைம்பெண்கள் புனர்விவாகம் செய்துகொள்ளலாம் என்று சட்டம் வந்தது. அதன் பிறகு நாங்கள் எழும்பூரில் இருந்தபோதே ஸ்ரீமான் வீரேசலிங்கம் பந்துலு அவர்

களும் அவரது தர்மபத்தினியாரும் புரசைபாக்கத்தில் வந்து இருந்துகொண்டு அவர்களிடம் வந்துசேரும் விதவைப் பெண்களை புனர்விவாகம் செய்யும்வரைக்கும் P. T. ஸ்கூலில் படிக்க அனுப்புவது வழக்கம். சில வருஷங்களுக்குப் பிறகு சென்னையிலேயே "புனர்விவாக சங்கம்" ஒன்று ஏற்பட்டு அதில் டாக்டர் முத்துலக்ஷ்மி அவர்கள் ஒரு முக்கிய அங்கத்தினர் ஆனபோது என்னையும் அதில் ஒரு மெம்பராகும்படிக் கேட்டார். "அதில் நான் மெம்பர் இல்லாமலிருக்கும்போதே எனக்கு வேண்டிய விண்ணப்பங்கள் வருகிறதே, இன்னும் மெம்பரும் ஆகிவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். ஆகவே என்னுடைய வேலை அவர்களைப் படிக்கவைப்பது மாத்திரம்–பிறகு விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படுபவர்களை உங்களிடம் அனுப்பிவிடுகிறேன். தகுந்த வரன் பார்த்து நீங்கள் விவாகம் செய்து விடுங்கள்" என்று வேடிக்கையாகச் சொன்னேன். அந்தக்காலத்தில் பஞ்சாபில் ஸர். கங்காராம் என்று ஒரு கோடீச்வரர் இருந்தார். அவர் இளம் வயதில்—உலகமே தெரியாதவயதில்—விவாகம் "பொம்மைக்கலியாணம்"போல ஆகி புருஷனையிழந்த கைம்பெண்களின் பரிதாப நிலைமையைக் கண்ணுற்று, "புனர்விவாக சங்கம்" ஒன்று அமைத்து, தன் ஆஸ்தியில் பெரும்பகுதியை அந்த சங்கத்துக்காகக் கொடுத்து புனர்விவாகத்தை ஜனசமூகத்தில் ஒரு சாதாரண ஸம்பவமாகச் செய்வதற்கு முயற்சித்தார். அதனுடைய கிளை ஸ்தாபனமே நமது சென்னையில் ஏற்பட்ட மேற்கூறிய சங்கம். கிறக.

ஆந்திரதேச சீர்திருத்தக்காரராகிய வீரேசலிங்கம் பந்துலு அவர்கள், வட இந்தியாவில் ஸர். கங்காராம் அவர்கள் இன்னும் எத்தனையோ பெரியவர்கள் பாலிய விதவைகளின் பரிதாபத்தைப் பார்த்து இரக்கப்பட்டு முதல் விவாகத்தைப்போலவே புனர்விவாகத்தையும் ஸர்வ ஸாதாரணமாக ஆக்கிவிட வேண்டுமென்று பிரம்மப்பிரயத்தனம் செய்தார்கள். புனர்விவாகத்தை ஆதரித்து சட்டமும் ஏற்படுத்தினார்கள். இவற்றின் பலன் என்ன என்று பார்த்தால் அது மிகமிகக் குறைவேதான். இதற்குப் பல காரணங்கள் உண்டு. பெண்களுக்கு முதல் விவாகம் செய்வதற்கே வரனுக்கு ஆயிரக்கணக்கில் தக்ஷிணையும், பேராசை கொண்ட வரனது பெற்றோர்களுக்கு வேண்டிய சீர்வகைகளும் செய்தும் அவர்களைத் திருப்தி செய்ய முடியாமல் பெண்ணின் பெற்றோர்கள் தத்தளித்துப்போகிறார்கள். ஆகவே, விதவையான பெண்களுக்குப் புனர்விவாகம் செய்வதற்கு 10 மடங்கு செலவு செய்யவேண்டும். அப்படிச் செய்தாலும் அந்தப் பெண்களுக்கு சந்தோஷ வாழ்க்கை கிடையாது—"விதவையாகிய உன்னை விவாகம் செய்துகொண்டேனே! என் சிநேகிதர்கள் என்னை பரிகாசம் செய்கிறார்கள், நீ எங்கேயாவது தொலைந்து போய்விடு" என்பது போன்ற பேச்சும் ஏச்சும் பிடுங்கல்களும்தான் அதிகம்—என்னிடம் படித்துவிட்டுப் போன என் மாணவிகள், மிகமிகச் சிலர் நூற்றுக்கு ஒருத்தி,—புனர்விவாகம் செய்துகொண்ட அனுபவத்தைப் பிற்பாடு எழுதுகிறேன்.

"தமிழ் மொழியில் வழங்கும் ப்ரபந்தமுறைகள் 96ல் எண்-செய்யுள் என்பது ஒருவகை; அதில் பாட்டுடைத்தலைவரது ஊரும் பேரும்வரும்; பத்துமுதல் ஆயிரம் செய்யுள்வரை பாடி, செய்யுளின் எண்ணிக்கையால் பெயரிடுவது வழக்கம். சந்திரனுக்குப் பதினாறு கலைகளிருப்பதுபோல் பதினாறு பாசுரங்களுடன் ஜ்வலிக்கும் இந்த ப்ரபந்தத்திற்கு ஆண்டாள் சந்திரகலாமாலை எனப் பெயர் வரலாயிற்று.

— வை. மு. ஸ்ரீ.

சந்திரகலாமாலை

●

"ஆலிநாடன்"

ஸ்ரீ ஆண்டாள் பாமாலையைப் பாடிக்கொடுத்தும் பூமாலையைச் சூடிக்கொடுத்தும் அரங்கனை மகிழ்வித்து நம்மையும் வாழ்வித்தருளின அவதாரவைபவம் ப்ரஸித்தம். பெரியாழ்வார் ப்ரார்த்தனைக் கிணங்க ரங்கமன்னாரும் கோதைப்பிராட்டியும் அர்ச்சா வடிவத்துடன் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோயில்கொண்டு நித்யஸேவை தந்தருளலாயினர்.

சமீப காலத்தில் அரிய அதிசயம் ஒன்றை விளைவித்தாள் ஆண்டாள். திருமாலுக்கு இரு மாலை தந்தவள், தானும் ஓர் எளிய பக்தனிடம் ஒரு மாலை பெற்றுக்கொண்டாள்! அவளுக்கு ஆத்மாலங்காரமாய்த் திகழ்ந்த அம்மாலையே சந்திரகலாமாலை.

* * *

சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீ ஆண்டாளுக்கு மன மொழி மெய்களில் தூயரான வில்லி என்னும் ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் பரிசாரகப் பணியில் அமர்ந்து உள்ளன்புடன் நித்யகைங்கர்யம் செய்துவந்தார். சிசுவாயிருக்கும்போதே தந்தையை இழந்த இவர்க்கு வயது முதிர்ந்த தள்ளாத தாயொருத்தியே கதி. தான் செய்துவரும் கைங்கர்யத்துக்கு ஏதேனும் தடை நேருமோ என்று சங்கித்து இல்லறம் புகாமல் ப்ரம்மசர்யமே பூண்டு விளங்கினர். காளைப்பருவம் புகுந்தும் கன்னியரைக் கனவிலுங்கருதாது நனவிலும் கண்ணெடுத்துப் பாராமல் பரம வைராக்ய நிஷ்டராய்த் தமக்கென வகுத்த திருப்பணியிலேயே அனவரதமும் ஆனந்தத்துடன் காலங்கழித்துவந்தார்.

* * *

இத்தகைய உத்தம புருஷரையும் விதியின் விளையாட்டு விட்ட பாடில்லை! அங்கமெலாம் அழுகித் தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் செறிதசையும் வேண்டா நாற்றமிகும் உடலாகிவிட்டது!— தன் நோயினையும் நோய்தருதுன்பினையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தாத அந்த பக்தர்க்கு, நித்யகைங்கர்யத்தை இழக்க நேர்ந்த நிலையே உள்ளத்தை ஊறு படுத்தியது.

அக்கால அரசாங்க முறைப்படி அவ்வூரிலுள்ள காட்டாற்றுக்கு அயலிலே ஓர் தனிக்கொட்டகை சமைத்து அதிலே அவரை

விட்டிட்டனர் கிராமத்தினர்—தொற்றுநோய் பிறரைப்பற்றிப் பரவாமல் இருத்தற்கு. பெற்றதாய்மட்டும் அன்றாடம் காய்ச்சின கஞ்சியும் கடாரத்தில் நீரும் ஏந்திச்சென்று தன் மகனது புண் நிறைந்த உடலைக் குளிப்பாட்டி ஆதரவாகக் கஞ்சியும் கொடுத்துத் தேற்றிவருவாள்.

மெய்புளகிக்கப் பரிசாரகப்பணிசெய்ய முடியாதுபோயி னும், வாசா கைங்கர்யமாக ஆண்டாளைப் புகழ்வதும் அவள் அரு ளிச்செயல்களைப் ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடுவதுமாகக் காலம் கடத்துவார். இன்னபோது இன்னதிருக்கோலமாயிற்றே! இன்னபோது இன்னஸேவையல்லவா ?...என்றென்றெல்லாம் உள் ளுருகுந்தோறும் உள்ளத்திரையில் ஆண்டாள் அளித்தருளும் காட்சிகள் அளவிலடங்கா.

* * *

இவ்வாறு பற்பல நாட்கள் செல்ல, ஒருநாள் இடிமின்னல் முழக்குடன் கடுமழை பொழிந்தது. காட்டாறு கரைபுரண்டு ஓடியது. நமது வைராக்யசிகாமணி "ஆழிமழைக்கண்ணா!" என்னும் ஆண்டாள் திருப்பாவைப் பாசுரத்தை பண்ணிசை யுடன் பாடுகிறார். பொழுது விடிகிறது ; மழையும் ஓய்ந்துவிடுகிறது. நாழிகையோ ஏறிக்கொண்டேவருகிறது. கொடிய நோய் உடை யார்க்குப் பசிப்பிணி படாதபாடு படுத்துமன்றோ! நாழிகை பதினைந்துக்கு மேலாயிற்று ; தாயும் வந்தபாடில்லை? வயிறு காய் கிறது. என்னசெய்வார் பாவம்! "நமது அன்னையும் அலுத்துச் சலித்துக் கைவிட்டுவிட்டாளோ ?" என்றும் ஐயப்படுகிறார். "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்." என்பார்களே. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம் புண்ணாகப் போகும்போது 'கிணீர் கிணீர்!' என்று ஆண்டாள் ஸன்னிதி உச்சிக்கால மணியோசை இவர் செவியில் விழுகிறது.

"உனது அடியவன்பசிப்பிணியால் வாடிவதங்க, நீ உன்மணாள னுடன் குலாவிக்குலாவிக் கொட்டுமுழக்குத் திருமணிச் சேவை யுடன் திருவமுது செய்கிறாயோ? அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும் எம்பெருமான் நந்தகோபாலன் மருமகளே! உன் புகுந்த குலத்தின் பெருமைக்குச் சேருமோ உன்செய்கை! என்னை, எளி ஏழைப்பனை—ரோகியை—நின் அடியனை ஏன் இப்படி வதை புரிகிறாய் ?"....என்று பற்பலவாறு அங்கலாய்த்துக்கொள்ளுகிறார், கண்களை மூடியவண்ணம் படுத்தபடுக்கையில் இருந்தபடியே.

கண்ணைத்திறக்கிறார். தன் தாய் வரும்வழியே நெடுநோக்குக் கொள்கிறார்; தள்ளாத கிழவி வருகிறாள்; விரைந்துவந்து நெருங்கி நிற்கிறாள். ஏற இறங்கப்பார்த்தார்—தனது தாய் நனைந்தபுடவை யும் முழந்தாள்வரை பூசிய சேறுமாய் ஒரு கையில் கஞ்சியும் ஒரு கையில் குடநீரும் ஏந்தி வழக்கம்போல் எதிரே நிற்கிறாள்.

"குழந்தாய்! பசியால் தடிக்கிறாயோ? என்ன செய்வேன்? இரவில் பெய்த பெருமழையால் காட்டாறு கரைபுரண்ட வெள்ளம் கண்டுவிட்டது. நெடும்போதாக அக்கரையில் நின்றேன். இடுப் பளவாக வெள்ளந்தணிந்ததும் ஓடோடியும் வருகிறேன். செல்வ

மகனே! என்ன தடிதடிக்கிறயோ? இனியாவது தாமதமில்லாமல் குளித்துக் கஞ்சியைக் குடித்து இளைப்பாறுவாய்" என்று தன் அருளொழுகு விழிகளினால் மஞ்சனமாட்டிக் குடநீர்கொண்டு புண்களைக் கழுவித்துடைத்து வேறு வஸ்திர முடுத்தி நெற்றியில் திருமண்காப்பையும் இட்டுக் கஞ்சியையும் ஊட்டினாள்.

இடையிடையே, "உண்மை இன்னதென ஊஹிக்கமாட்டாமல் உன்னிடம்கூட சந்தேஹம் கொண்டுவிட்டதே இந்தப்பாழும் மனம்—பசிப்பிணியின் கொடுமையால்." என்கிறார்.

தாய்:—என் செல்வமே! உன்னையன்றி இவ்வுலகில் எனக்கு வேறென்ன இருக்கிறது? உனது உள்ளன்புடன் கூடிய ஸந்நிதி கைங்கர்யத்தைப் போற்றாதவர்கள் இல்லை. என்கண்ணே! உன்னைச் சான்றோன் என்று ஊரார்கூறக் கேட்டு உள்ளம் உகப்பேன்—நீ இருக்கும் இந்த நிலையைக் கண்டு நான் படும்பாடு அந்த ஆண்டாளும் அரங்கனும்தான் அறிவர்.

வில்லி:—"அம்மா! நீ எனக்கு உணவுதானா கொடுத்தாய். உயிரன்றோ அளித்தாய். அது இருக்கட்டும். இன்று என்ன தனிப்பட்ட ஒரு போக்யதை நீ தந்த கஞ்சியில் ஏற்படுகிறதே! என்ன ருசி! கமகமவென்று மணத்துடன் இனித்திருக்கிறதே!'

தாய்:—கடும்பசியில் உப்பில்லாக்கூழும் அப்படித்தான் தோன்றும். தனிச்சிறப்பு என்ன இருக்கிறது?

மகன்:—நாவில் இனிமை இன்னும் அப்படியே ஒட்டிக்கொண்டிருக்கிறது அம்மா! உடம்பு கூட எரிச்சல் வலி எல்லாம் இருந்த இடமே தெரியவில்லையே! ஜில்லென்று ஒரு ஆனந்தம் உண்டாகிறதே!

தாய்:—சற்று இளைப்பாறுகிறாயா?

மகன்:—அம்மா! அம்மா! எனக்கு பயமாயிருக்கே. நீ வருவதற்குத்தாமதம் ஏற்பட்டதும் காரணம் அறியாமலே உன்னை நொந்துகொண்டதுமல்லாமல் கோயில் உச்சிகால மணியொலி கேட்டதும், உலகமாதாவான ஆண்டாளையு மன்றோ தூற்றிவிட்டேன்! ஏற்கெனவே, நெஞ்சறிந்து ஒரு தவறும் இழைக்காதிருந்தும் கர்மானுகுணமாக இப்படி அவதிப்படுகிறேன்; இன்று பசிக் கொடுமையால் சொன்னதைக் கருணைக் கடலாகிய ஆண்டாள் பொறுத்துக்கொள்ளுவாளா?

தாய்:—பொறுப்பாள், பொறுப்பாள்; கவலைப்படாதே. பசி ஆறியதா? சற்று படுத்துக்கொள். நான்போய் இனித்தான் புசிக்கவேண்டும். போய் வருகிறேன். உடம்பை ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்.—என்று சொல்லிவிட்டு வெகு விரைவில் திரும்பிச் சென்றாள்.

* * *

என்றுமில்லாத ஓர் ஆனந்தத்தை அநுபவித்தவாறிருக்கையில் கருடத்வனி செவிகுளிர விழுகிறது. சடக்கென்று எழுந்து வெளியே வந்து கருடதரிசனம் செய்கிறார். "வேதஸ்வரூபியே! தேவரீர் ஸர்வதேச ஸர்வகால ஸர்வ அவஸ்தைகளிலும் ஸகலவித கைங்கர்யங்களையும் எம்பெருமானுக்குச் செய்து மகிழ்ச்சியடை

கின்றீர். தேவரீரே வாஹனமும்; தேவரீரே த்வஜபடமும். தேவரீர் சிறகின் கீழன்றோ பரதத்வம் வளர்கிறது. தேவரீரை இன்று கேட்டும் கண்டும் யான்பெறும் பயன் இணையற்றதாகும்! இது நிச்சயம்!" என்கிறார். கருடனும் இவ்வுத்தமர் தங்குமிடத்தையே வட்டமிட்டுக்கொண்டும் "க்ருஷ்ண க்ருஷ்ண" என்று இனிய த்வனியைச் செய்துகொண்டுமிருந்தார்.

* * *

"என்ன அதிசயம்! இதோ மறுபடியும் என் ஜனனி அன்னை திரும்பவும்வருகிறாள்! ஏதாவது வைத்து மறந்துவிட்டாளா?"

தாய்:—அப்பா! இதோ ஓடோடியும் வந்துகொண்டிருக்கிறேன். உன்னை இப்படி பட்டினிபோட்டுவிட்டேனே! ஸர்ப்பம் போலே சீறிக்கொண்டு காட்டாற்றில் வெள்ளம் கரைபுரண்டு வந்ததால் அது தணியுமட்டும் அக்கரையில் நெடும்போதாகக் காத்துக் கிடந்தேன். எனக்கு இருப்பாகவேஇல்லை. எழுந்திருந்து எங்கே வெளியில் வந்துவிட்டாயே! இன்னும் நீ பல்கூட துலக்கவில்லையா? நேற்று நான் இட்டதிருமண் இப்போதுதான் இட்டதுபோல் அப்படியே இருக்கிறதே! குளிப்பாட்டுகிறேன் வா!

மகன்:—இது என்ன அம்மா விசித்திரம்! நான் காண்பது கனவா? நனவா? சற்றுமுன்புதானே நீ வந்து எல்லா உபசாரங்களையும்செய்து அத்புதமான உணவையும் தந்துசென்றாய். ஏதோ வைத்துவிட்டதை எடுக்க வந்தாய் என்றல்லவோ எண்ணினேன்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

தாய்:—என்னடா குழந்தை! இப்படிப் பேசுகிறாயே? நான் இப்போதுதானே வந்துகொண்டிருக்கிறேன். யார் வந்தாள்? என்ன கொடுத்தாள்? பசிக்களைப்பா? ஏன் இந்தமாறாட்டம்?....

மகன்:—அம்மா! ஒருவிதமான மாறாட்டமும் எனக்கு இல்லை. மிகவும் தெளிந்த அறிவுடன்தான் பேசுகிறேன். இன்று நீ தந்த உணவு தனிப்பட்டது. நீ சற்றுமுன் என்னைக் குளிப்பாட்டிய போதும் சரீரத்தில் உண்டான ஓர் ஆனந்தத்திற்கு அளவில்லை. இப்போது நீ மறுபடியும் வந்து என்னை உடல் குளிக்கவும் கஞ்சி குடிக்கவும் சொல்கிறாயே.

தாய்:—இதோபார்! கஞ்சி அப்படியே இருக்கிறது. இந்தக் குடத்தில் வாச நீரும் அப்படியே இருக்கிறது பார்த்தாயா? அதிக பசியில் உனக்கு ஒன்றும் தெரியவில்லை. இப்படிவா. உன்னைக் குளிப்பாட்டுகிறேன் பிறகு களை நீங்கி நல்ல ஞாபகமும் உண்டாகும். என் கண்மணியே!

மகன்:—அம்மா! அம்மா!! இதோ பார். இது என்ன விசித்திரம்! குறைந்துபோன விரல்கள் கைகளிலும் கால்களிலும் நீண்டு நிறைந்து முன்னிலும் அழகாகவும் உறுதிப்பாட்டுடனும் அமைகின்றனவே! சரீரத்தைப் பார். புண் இருந்த இடமே தெரியவில்லையே! எல்லா அவயவங்களும் கைங்கர்ய உபயோகி ஆகிவிட்டனவே! இத்தனை காலம் இழந்தகைங்கர்யம் மறுபடியும் கிடைக்கும் போலிருக்கிறதே! இதென்ன! இவையெல்லாம் இந்திரஜாலம்

போல் இருக்கின்றனவே! என்னைத் தொட்டுப்பார் அம்மா! எல்லாம் உண்மைதானு?

தாய்:—என் அருமைக்குழந்தாய்! உன்னை இப்போதுதானே கொடுநோய் கதுவ அங்கம் குறைந்து அழகழிந்து குழிப்புண்களுடன் கண்டேன். என் கண்ணையே நான் நம்பவில்லை. உனது சரீரம் முழுதும் தங்கமயமாய் ஜொலிக்கின்றதே இதோ! நான் இப்போதுதான் வருகிறேன். ஆதலால் என் போல உனக்கு உணவு கொடுத்து உபசரித்தவள் நித்தம் நீ வழிபட்டு ஏத்தும் திருமல்லி வளநாடியாய்த்தான் இருத்தல்வேண்டும். கர்மம் பிடரிபிடித்துத் தள்ளப் பிறந்தவள் நான்; க்ருபையே வடிவெடுத்து அவதரித்தவள் கோதை: உன்னை மகனுகப் பெற்றவள் நான்; "அகில ஜகந்மாதரம்" என்றபடி உலகுயிர் அனைத்தும் ஈன்ற பச்சைப் பசுங்கிளி அவள். எனது சம்பந்தம் உன்னைப் படாதபாடு படுத்திவதைத்தது; மல்லி நாடாண்ட மடமயில் தன் ஸம்பந்தத்தால் உன்னைப் பொன் மேனியனுக்கினுள்.

மகன்:—அம்மா! நீ சொல்வதுஎல்லாம் ஸத்யம். இப்போது தான் நான் அறிகிறேன். எனக்குக் கொடுத்தகஞ்சி அமுதிலும் ஆற்ற இனிதாயிருந்தது. குளிப்பாட்டும்போதும் ஓர் அச்புத உணர்ச்சி உடல் முழுதும் உண்டாகியது. அம்மா! சரீரம்தான் குணப்பட்டதுஎன்று எண்ணிவிடாதே இதோ நெஞ்சில் தோற்றும் அறிவொளியை என்னென்பேன். எம்பிராட்டி சூடிக்கொடுத்த சுடர்க்கொடியை நாவார வாழ்த்த விரும்புகிறேன். ஆனுல் ஒரு எழுத்தும் நான் கற்கவில்லை. பிறந்ததுமுதல் கைங்கர்ய நிஷ்டையிலேயே திருஷ்டி. எனது மனம் பதைக்கிறது. இப்படிப்பட்ட அத்புதத்தைச்செய்த அருள் தேவியை ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் பாடுவேன்...ஆனுல், எப்படித் துவக்குவது...ஒன்றும் அறியாதவனுயிற்றே! அகத்திலுள்ள ஆசையனைத்தையும் அப்படியே அமுத மொழிகளாய்க் கொட்டிவிடவேணுமென்று பேராவல் உண்டாகிறதே! தொல்பாவை பாடியருளவல்லபல்வளையாய்! நான் என்னவென்று உன்னைப்பாடுவேன்?...ஞானக்கை தா; காலக்கழிவு செய்யேலே..."

ஆகாசவாணி "பூ" என ஓர்இனிய ஓரெழுத் தொருமொழியை வெளியிட,

"பூமாதெனத் தேவர் போற்றிடத் தவமுனிவர்
புண்ணியப்பல மிதென்னப்
புவியோரனைத் துலகும் ஈன்றதாயென அறிஞர்
போதமிகு செல்வமெனவே

நாமாதெனப்புலவர் கொண்டாட ஆழ்வார்கள்
நந்தல மடந்தையென்ன
நந்திருவரங்கேசர் தந்திருத்தேவியென
நானிலத்தவதரித்தாய்!

பாமாறன் முத்தமிழ்த் திருவாய் மொழிப் பனுவல்
பாராட்டி ஆராட்டிடப்

பள்ளிதுயில் கொள்ளுமென் கிள்ளைக்கு வள்ளப்
பசுந்தேற லூட்டி மெள்ளத்

தேமா நறுங்கனி அருத்திக் கருத்துடன்
செங்கையிலிருத்தி வேதத்

திருப்பாவை முப்பதும் விருப்பாய் பயிற்றிடும்
திருமல்லி வளநாடியே."

[தேவர்கள் உன்னை மலர்மங்கை என்று துதிக்கவும், தவத்திற் சிறந்த முனிவர்கள் தங்களது புண்ணியத்தின் பயனாகவே உன்னைக் கொண்டாடவும், பூலோகத்திலுள்ளோர்கள் "அகிலஜகன்மாதரம்" என்றபடி நீதான் எல்லா உலகங்களையும் பெற்றெடுத்த தாய் என்று போற்றவும், அறிவுடையோர் ஞானமாகிய பரம ஐசுவர்யம் நீயே என்று பாராட்டவும், புலவர்கள் கலைமகளே நீ என்று புகழவும், ஆழ்வார்கள் தங்களுடைய ஞானசக்தி நீதான் என்று வாழ்த்தவும், நமது திருவரங்கச்செல்வர் உன்னைத் தன் திருத்தேவி என்று உரிமை பாராட்டவும்—இவ்வாறு ஒவ்வொருவர்க்கும் அவரவர்கட்கு ஏற்ற சிறப்புடன்—இந்த பூலோகத்தில் நீ அவதரித்துள்ள வைபவத்தை என்னென்று சொல்லுவேன்! உனது நாட்டின் தனிச்சிறப்புதானென்னே! திருவாய்மொழி பாடி தாலாட்டி கிளிப்பிள்ளையைத் தூங்கச்செய்வதும், அது விழித்தெழுந்ததும் தேனும் கனிரஸமும் ஊட்டுவதும், பிறகு அதைக் கையிலேந்தி திருப்பாவை முப்பதும் கற்பிப்பதுமாகிய நிகரிலாப் பெருமை பொருந்திய வளம்பெற்ற திருமல்லிநாட்டில் பிறந்தவளன்றோ நீ!]

என்று பாடத் தலைப்பட்டனர் நமது வில்லியார். சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் நடைநோக்கும் துறையினோக்கோடு பதினாறு பாசுரங்கள்பதினாறுகலைகள் கொண்ட பூர்ண சந்திரமண்டலம்போல் தண் நிலவு பொழிய கம்பீரமாய் வெளிப்பட்டதே சந்திரகலாமாலை!

தாயும் மகனும் கானாம்ருதத்தை பானம் பண்ணிக்கொண்டிருக்கும்போது மேளதாளங்களுடன் ஒருபெரிய கோஷ்டி தங்களை நோக்கி வருவதை உற்றுநோக்கினர்.

ஆண்டாள் அருளப்பாடிட்டு கோயில் அனந்தகொத்து பரிஜனங்களையும் ஸன்னிதி பஹுமானங்களுடன் சென்று வில்லியாரை அழைத்துவர நியமனம் ஆக, அங்ஙனமே அவர்கள் வந்து வில்லியார்க்குத் திருப்பரிவட்டம்கட்டி ஸன்னிதி ஸன்மானங்களைச் செய்து நித்யகைங்கர்யத்துக்கு அழைத்துச்சென்றனர். அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த உத்ஸவத்தின்சிறப்பு வாசாமகோசரம்.

* * * * *

இந்த சந்திரகலாமாலை என்னும் அருள்மொழியை நித்யாநுஸந்தானமாகப் பாராயணம் செய்பவர்கள் பலர் என்றும், நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த பிரபந்தத்தை ஒரு மண்டலம் பக்தியுடன் பாராயணம் செய்ய எத்தகைய கொடியநோயாயினும் அது தீரப்பெறுகிறார்களென்றும் அநுபவம் வாய்ந்த ஆன்றோர் கூறுவர்.

1—10—1949
1836

புழுகெளிந் துண்டுவளர் தசைநரம் பென்புதோல்
புண்ணிணக் குப்பிராற்றப்
புரைப்பாழ்ங் குழிச்சல மலச் சேற்றழுந்திப்
புதைந்துளைந் தேனையெவருந்

தொழுமினிய பங்கயத் தாளா லெடுத்துமெய்ச்
சோதியமு தாலயமலர்த்
துணைவிழியி லானந்த வருண்மாரி
தோயக் குளிப்பாட்டினுய்

என்று தாம்பெற்றபேற்றைத் தாமே கூறுகிறார்.

ஆண்டாள் பகவானுக்குப் பசுங்கிளியாயும், அன்னமாயும், தீபமாயும், கோதையாயும் விளங்கியதை எவ்வளவு கவிநயத்துடன் பாடுகிறார் பாருங்கள்!

சுந்தரத் தோளழகர் மாலிருஞ் சோலையிற்
சொற்பசுங் கிள்ளையாகிச்
சோதிமண வாளர்தங் காவிரிநதித்துறைத்
தூயமட வன்னமாகிக்

கொந்தவிழ் மலர்ச்சுனைக் கோனேரியப்பனநல்
கொண்டதிரு வேங்கடப்பொற்
குன்றத்தி லேற்றிய விளக்காகி வடபெருங்
கோயிலுட் கோதையானாய்!

* * * * *

இந்த பக்தமணியின் மனோ பரிபக்குவத்தைப் பின்வரும் அடிகளே உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்குகின்றன:

மின்னற்ற மின்னெனப் பாவிக்க வைக்கினுமவ்
வாழ்வையொரு பொழுதும்வேண்டேன்
வண்புதுவை மின்னினடி தொழுமவர் புறங்கடையில்
வைதுநா யெனவதுப்பாய்!

* * *

கண்படைத் ததுநினைக் காணவுஞ் சென்னியுன்
கழலிணை வணக்கமுறவுங்
கையுனைப் போற்றவுந் நாவுனைப் பாடவுங்
காலுனை வலஞ்செய்யவும்

பண்புறச் செவியுனது வண்புகழ் கேட்கவும்
பாவிக்க மிம்மனிதனாய்ப்
பாரிற் பிறப்பதற் காசையல்லாலுனது
பரமபத வாழ்வும் வேண்டேன்!

திருமல்லி வளநாடி சீர்திருவடிகளே சரணம்.



ஆத்ம சோதனை

★

கவியோகி

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

21. 'படிக்கப்போறேன்'

பள்ளிக்கூடத்தைப்பற்றி எனக்கு உற்சாகம் உண்டாகவேயில்லை. எனது தமயன்மார்கள் புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு பெரியபள்ளிக்கூடம் சென்று வருவார்கள். அவர்கள் புத்தகங்களை அப்படி இப்படித் திருப்புவேன். அக்கா பெண்பாடசாலைக்குச் சென்றுவந்து "கொக்குக்கு நரி செய்தவிருந்தைக் கூடிப் பாடுவோம்" என்று அபிநயப்பாடலைத் தொடங்குவாள். அவள் அரிச்சுவடியால் எழுத்துக் கற்றேன். காலை பத்துமணிக்கும் மாலை ஐந்துமணிக்கும், மாணவர் கூட்டம்கூட்டமாக எங்கள் வீட்டு முன் செல்வதைக்காண்பேன். இவர்கள் எங்கே போய் என்ன செய்கிறார்கள் பார்ப்போம் என்று புறப்பட்டேன். சும்மாவா? என் அண்ணாவின் பெர்ஸிவல் அகராதியைத் தூக்கிக்கொண்டு நானும் படிக்கக் கிளம்பினேன்: "அட படவா! எங்கே போறாய்?' என்றொரு சத்தம் கேட்டது. சுப்பராமையரின் தொண்டைதான் அது..."பெரியபள்ளிக்கூடம் போறேன்" என்று நடந்தேன். "அட படவா! அங்கே போய் என்ன செய்வாய்?" என்றார் அவர். "அண்ணாவுடன் படிக்கப்போறேன்" என்றேன். "அடாராஸ்கல், அண்ணாவா? நீ ஜே. வேங்கடராமன் தம்பியா?. அதனாலேதான் இப்படிப்பேசுகிறாய்....வா" என்று கூட்டிச்சென்று என் அண்ணாவிடம் கொண்டுவிட்டார்.

அண்ணா "சீ அதிகப்ரசங்கி! இங்கேன் வந்தாய்?....படவா! என் டிக்ஷ்ணரியைத் தூக்கிவந்தாயா! கொடுக்கட்டுமா அறை? பேசாமல் இங்கே உட்கார்; ஒரு மணிக்கு உன்னைக் கூட்டிச் செல்கிறேன்" என்று 144 போட்டு, என்னை படமாத்தூர் கிருஷ்ணசாமிஐயங்கார் வகுப்பிற்குமுன் ஒரு வேப்பமரத்தடியில் அமர்த்திச் சென்றான். அப்போது "என்னடா எலிகுன்ஸ்! பிரம்படி வாங்கவா வந்தாய்?" என்று வந்தான் ராமு. "இல்லை, படிக்கத்தான் வந்தேன்" என்றேன். "குண்டியாட்டிவாத்தியார் முண்டுலே போடுவார், சொரிவத்தி வாத்தியார் திட்டுவார், காக்காவத்தியார்

கட்டைப்பிரம்பால் விளாசுவார்—இதுதான் படிப்பு. பார்...வேடிக்கையை'' என்று என்னை அழைத்துக்கொண்டு எல்லா வகுப்புகளையும் காட்டி "இவரே ஆந்தை வாத்தியார், இவர் சொரிவத்தி, இவர் காக்கா, இவர் உலக்கைத்தடி'' என்று ஆசிரியர்களைக் காட்டிக்கொண்டே சென்று, பிறகு தன் வகுப்புக்குள் நுழைந்தான்.

நான் வெளியிலிருந்து எல்லாம் பார்த்தேன். பள்ளிக்கூடம் சுறுசுறுப்பாக நடந்தது. என் ரங்கண்ணு வகுப்புவாசலில் நின்று பார்த்தேன். அண்ணு ஆங்கிலக்கவி ஒப்பித்தான்....பிறகு மூத்தண்ணுவகுப்பை எட்டிப்பார்த்தேன். அண்ணு ஏதோ கணக்குப் போட்டுக்கொண்டிருந்தான். இன்னொருவகுப்பில் ஆசிரியர் "தடிக்கழுதைகளா! உங்களைக் கட்டி மாரடிப்பதைவிட சந்யாசம் வாங்கிக்கொண்டு போகலாம்...மக்குகள்!'' என்று சினந்தார். அவர் கண்ணும் பல்லும் பயங்கரமாயிருந்தன. நான் மேல்வகுப்புகளைச் சுற்றிப்பார்த்துவிட்டுத் திரும்பும்போது, சிலபையன்கள் ஒரு அண்டாமுன் தண்ணீர் குடித்துக்கொண்டே சண்டையிட்டனர். "எனக்கும் தண்ணீர் கொடுங்கோ'' என்று கையை நீட்டினேன். இந்தச்சமயம் "ஏண்டா பயல்களா, என்ன சத்தம்? ஸ்'' என்றொரு கம்பீரமான ஆள் அதோ நின்றார்.

'டே ஹெட்மாஸ்டர்!'' கப்சுப்! எடுத்தனர் ஓட்டம்! அவரே தலைமைஆசிரியர். நானும் தண்ணீர்குடிக்காமலே அவர்களுடன் ஓட்டமெடுத்துக் கீழ்வகுப்புக்களைச் சுற்றிப்பார்த்தேன்.

ஒருவகுப்பில் ஆசிரியர் வாய்க்குவந்தபடி கெட்டவசவுடன் பையன்களை அடித்துக்கொண்டிருந்தார். 'ஐயோ ஐயோ' என்று ஒரு சிறுபையன் துடித்தழுவதைக் கண்டேன். மற்றொரு பையன் பெஞ்சிமேல் நின்றான். இன்னொருவன் பெஞ்சிமேல் நின்றபடி சிலேட்டுக்குச்சியைக் கீழே போட்டுப்போட்டு எடுத்து, காலுக்கு ஓய்வு தந்தான். இன்னொரு வகுப்பில் ஒரு பையன் நெற்றியில் சுன்னம் போட்டார் ஆசிரியர்; எல்லாப்பையன்களும் சிரித்தார்கள். "சிரிக்கிறாயா கழுதை'' என்று அவனை நாலடி பிரம்பால் வைத்து பெஞ்சிமேல் ஏற்றினார் ஆசிரியர். அவன் அழுதான்.

நான் பயம்பிடித்து, கடைசி வகுப்புக்குச் சென்றேன். அதற்கு அந்தக்காலம் அரைக்கிளாஸ் என்று பெயர். அங்கே கொட்டாப்புளி வாத்தியார் "கவனமாய் எழுதுங்கோ'' என்று பிரம்பைச் சுழற்றிக்கொண்டிருந்தார். சுவரில் அரிச்சுவடி அட்டை பெரிதாகத் தொங்கியது. எனக்கு முன்பே தெரியும். அக்காவின் 'அம்மி அரிவாள்' புத்தகம் பார்த்து எழுத்தெல்லாம் கற்றிருந்தேன். இப்போது அட்டைபார்த்து எழுத எளிதாயிருந்தது. நான் தைரியமாக வகுப்புக்குள் நுழைந்தேன். ஏனென்றால், எல்லாரும் என்னைப்போலக் குழந்தைகள். நான் புகுந்ததும் 'ஸார் ஸார் புதுப்பையன்!' என்று குழந்தைகள் சத்தமிட்டார்கள். "யாரடா புதுப்பையன்?'' என்று கொட்டாப்புளி வாத்தியார் என்னைப் பார்த்தார். "என் அண்ணு ஜே. வெங்கடராமன்; நான் படிக்க வந்திருக்கிறேன். நானும் எழுதுவேன்'' என்றேன்.

அவர்:—அட நீ ஜடாதரம் பிள்ளையா? அப்படிச் சொல்லுடா—என்று அன்புடன் தட்டிக்கொடுத்து, ஒரு சிலேட்டும் பென்ஸிலும்தந்தார். நான் கவனமாக உயிரெழுத்து மெய்யெழுத்துகளை எழுதி, முன்னால்கொண்டு காட்டினேன். "யாரடா மிந்திரிக்கொட்டை" என்று பின்னால் ஒரு தடிப்பையன் முணுமுணுத்தான். ஆசிரியர் பையன்களை உயிரெழுத்துக்களை மட்டுமே எழுதச்சொல்லியிருந்தார். நான் உயிரெழுத்து மெய்யெழுத்துடன் ஒன்று இரண்டும் எழுதிக்காட்டியதும் "நீ கெட்டிக்காரன்" என்று பத்து மார்க்குப்போட்டு "பள்ளிக்கூடத்தில் சேர்; உன் அப்பாவிடம் சொல்லுகிறேன்" என்றார். மற்றப்பையன்கள் ஆ ஏ இ ஐ ஔ முதலிய எழுத்துக்கள் எழுதுவதற்குள் பெரும் பாடாய்விட்டது. தடியா மடயா என்ற வசவுக்களிடையே ஒரு வாறு எல்லாரும் வெளியே ஒண்ணுக்குச் சென்றனர். நான் அங்குமிங்கும் சிறிதுசுற்றி, பெரியவகுப்புகளில் என் அண்ணாவைத் தேடி வந்தேன்.

22. கண்ணோட்டினர்.

இனிய பாட்டுக்கேட்டது. ஓடினேன். நாராய்! நாராய்! செங்கால் நாராய் என்ற சத்திமுற்றப்புலவர் பாட்டை ஆரபி ராகத்தில் பாடிக்கொண்டிருந்தார் தேய்வசிகாமணி ஐயர். அவரை நான் தெருக்களில் பார்த்திருக்கிறேன். அவர் பிரசங்கமும் ஒருதரம் கேட்டிருக்கிறேன். அவர் ஞானி, புலவர் என்பதை அறிவேன். மற்ற ஆசிரியர்போல் சட்டை பாகையில்லாமல், மேலே அங்கவஸ்திரம் மட்டும் அலட்சியமாகப் போட்டுக்கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்த அவரைக்கண்டதும் என் உள்ளத்தில் பயபக்தி எழுந்தது. வகுப்புக்கு வெளியே ஒரு சுவரோரம் பத்மாசனத்தில் அடக்கமாக அமர்ந்து, அவர் முகத்தையே பார்த்தேன். முகத்தில் யோகக்களை, கண்களில் கருணையொளி, உதட்டில் நல்ல புன்னகை. பெருந்தன்மையான பேச்சு...வசவுதிட்டு இல்லை. நகைச்சுவை அதிகம். மற்ற ஆசிரியருக்கும் அவருக்கும் எவ்வளவோ வேற்றுமை. அவர் வகுப்பு முடியுமட்டும் நான் அசையாமல் அமர்ந்திருந்தேன். ஐயரும் என்பால் கண்ணோட்டினர். மணி யடித்ததும் அவர் வெளியே வந்தார். நான் எழுந்து நின்றேன்.

"நீ யாரம்பி?" என்றார். "நான் ஜே. வெங்கடராமன் தம்பி, படிக்கவந்தேன்...உங்கள் வகுப்பில் என்னைச் சேர்த்துக்கோங்கோ ...உங்களைத்தான் எனக்குப்பிடிச்சிருக்கு."...என்றேன். அவர் என் முதுகில் தட்டிக்கொடுத்து...இந்த வகுப்பில் நுழைய நீ ஏழு வருஷம் படிக்கவேண்டும்" என்றார். "நீங்கள் சேர்த்துக் கொள்ளுங்கோ நான் எல்லாம் நிமிஷம் படித்துவிடுகிறேன். கொட்டாப்புளி வாத்தியார்கூட என்னை கெட்டிக்காரன் என்றார்" என்றேன். "அது யாரடா கொட்டாப்புளி? அப்படி ஒரு புளி உண்டா?" என்றார். சொன்னேன். "இனி அப்படிப் பெரியவாளைக் கேலிபண்ணாதே; அவர் பெயர் நரசிம்மையர்" என்றார்.

பிறகு என்னைக் கையுடன் அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு எதிரேயிருந்த வைத்தியம்பிள்ளை மடத்திற்கு வந்தார்.

அங்கே சிவபடம் இருந்தது. நான் அதை வணங்கினேன். அங்கிருந்த வைத்தியம்பிள்ளையிடம் "இந்தப்பையன் புத்திசாலி... நல்ல நிலைக்குவருவான்'...என்றார். பிள்ளை "அப்பேன்! உனக்கு அரிச்சுவடி வருமா?" என்றார். "வருமே" என்றேன். "அப்புறம் என்ன வரும்?" "பராபரக்கண்ணி, நந்தனார் பாட்டு, அருட்பா, தேவாரம் திருவாசகம் எல்லாம் வரும்"...வந்ததை மடமட வென்று ஒப்பித்தேன். தெய்வசிகாமணிஐயருக்கு என்மேல் அன்பு தளிர்த்தது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

என்ற இரண்டு குறள்களையும் திருப்பித்திருப்பிச் சொல்லச்செய்து, நான் எளிதாக அறியும்படி விளக்கி, "தம்பி! அறிவு இந்த இடத்தில் (மண்டையில்) உள்ளது. "நீ நல்ல நூல்களைப்படி ; அறிவாளி களுடன் பழகு ; ஊற்றைத்தோண்டத் தோண்டத் தண்ணீர் சலசலவென்று வருகிறதல்லவா! அதுபோல் அறிவும் உன் உள் ளிருந்தே பெருகிவரும்.

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் ; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

ஆத்தா ஊருணியிலே தாமரை மலர்வதைப் பார். நீர்மட்டத்திற்குத் தக்கபடி மலர் நீண்டு வளரும். உன் உள்ளத்தில் உள்ள ஊக்கத் திற்குத் தக்கபடியே அறிவும் வளரும்..." என்றார். பிறகு அவர் வீட்டுக்குச் சென்றார். நான் "மாமா நமஸ்காரம்" என்று வீட்டைநோக்கி நடந்தேன். தாமரைக்குளம் என் உள்ளே வேலை செய்தது. ஐயர்சொல்லிய குறள்கள் என் வாழ்வில் ஊறின. அன்றுமுதல் நான் உள்ளத்தில் ஊக்கிய அறிவால் கல்விபயின்றேன். தெய்வசிகாமணிப் புலவரைப் பிறகு சந்திப்போம்.

23. நானே கற்றேன்

பள்ளிக்கூடம் என்றால் உபாத்தியாயர், வாத்தியார் என் றால் பிரம்படி—என்று அஞ்சினேன். ஆனால் என்னுள் ஏதோ ஒன்று "பயப்படாதே தைரியமாகப் படி" என்றது. "இதென்ன பிரமாதம்? நானே படித்துக்கொள்ளுகிறேன்"...என்று தொடங்கினேன். எனக்குத்தான் எழுத்துத்தெரியுமே. அக்காளின் முதற்பாட புத்தகத்தில் படத்துடன் வார்த்தைகள் உண்டு. எழுத்துக்கூட்டிப் படித்தேன். பிறகு பராபரக்கண்ணியை வைத்துக்கொண்டேன். அது எனக்குப் பாடம்; ஆகலால் எழுத்தெழுத்தாக எழுதி எழுதிப் பழகினேன். என் பள்ளிக்கூடம் எது தெரியுமா?...நடராஜா சந் நிதியும் கோயில் கோபுரமுமே. வீட்டில் பழையது சாப்பிடுவேன். ...சிலேட்டுபென்ஸில் பராபரக்கண்ணி எடுத்துக்கொண்டு தனியே

அங்கே செல்வேன்...கோபுரத்தில் குளிர்ந்த காற்று வீசும்...யாரு வரமாட்டார்கள். அங்கே பாம்பிருப்பதாக பயமும் ஊரில் உண்டு. பராபரக்கண்ணியைத் திருப்பித்திருப்பி எழுதியதில் எழுத்துப்பிடி பட்டது. பிறகு தாயுமானார் பாடல்களை முதலிலிருந்து ராகம்போட்டுப் படித்தேன். தட்டினால் சிவசந்நிதியைப் பார்த்து; "அப்பனே! நீ தான் குரு; எனக்கு அறிவைத்தா" என்பேன். பத்துப்பதினைந்து நாட்களில் தமிழ் நன்றாகப்படிக்க முடிந்தது. உடனே என் அண்ணா புத்தகங்களைப் படிக்கத்தொடங்கினேன்.

பெரியண்ணா "அதிகப்ரசங்கி! உனக்கென்னடா தெரியும்?" என்பான். "தெரிந்தமட்டும் படிக்கிறேன் கேள்" என்று உரத்திப்படிப்பேன். அவனே வியப்பான். இப்படி எழுத்துக்கற்ற பிறகு, எண் கற்கவேண்டுமே. அந்தக்காலம் குன்றக்குடி வாத்தியார் எண்சுவடிப்புலவர். அவர் எங்கள் வீட்டுக்கருகே கொல்லைப் புறத்திலேதான் பள்ளிக்கூடம் வைத்திருந்தார். ஒருநாள் அங்கே சென்றேன். ஐயோ பாவம்! என்னைப்போன்ற சிறுவர் கண்ணீர். வடித்துநின்றனர். இருவர் கோதண்டத்தில் ஏறிகின்றனர். சிலருக்கு நல்ல பிரம்படி; சிலர் அழுதுகொண்டே எண்சுவடி குழி மாற்று முறைவைத்தனர். நான் எண்சுவடியில் ஒரோணொண்ணு மட்டும் தெரிந்துகொண்டு ஓடிவந்துவிட்டேன். அப்பாவிடம் சொன்னேன். அவர் எனக்கு எண்சுவடிவாய்ப்பாடு சொல்லித் தந்தார். ஆனால் எனக்குக் கணக்கு ஏறவில்லை. அம்மாள் "இவனை ரங்கையங்கார் பள்ளிக்கூடத்தில் போடுவோம்" என்றாள். விஜய தசமி நாள் பார்த்திருந்தது. அதற்குமுன்பே நான் அந்தப்பள்ளிக் கூடத்திற்கு ஓடிச்சென்றேன். ஏன்? அங்கே எனது நண்பர் சிலர் இருந்தனர்.

இரட்டைத் தெரு ரங்கையங்கார் பள்ளிக்கூடம் எனக்கு முன்பே தெரியும். நவராத்திரியில் அவர் மாணவருடன் கிலுக்கெடுத்து பணக்காரர் வீடுகளுக்கு வந்து கோலாட்டம் நடத்துவார். எனது நண்பர் அனந்து, ராமு, ரங்கு, மணி இவர்களுடன் நானும்தனியாக கோலாட்டம் பழகுவேன். ஐயங்கார் கலைநிரம்பியவர்; அவருக்குச் சோதிடம் மாந்திரிகம் வைத்தியம் தெரியும். நன்றாகப்பாடம் சொல்லித்தருவார். அடிக்கவேமாட்டார். வையமாட்டார். அதனால்தான் அவரிடம் சென்றேன்.

விஜயதசமியன்று பெற்றோரும் அண்ணன்மாரும் என்னை ஐயங்கார் திண்ணைப்பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். ஐயங்காருக்குப் புதிய பத்தாறு தந்தனர். காப்பரிசி பருப்புத் தேங்காய் நிவேதித்தனர். வெல்லத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து அக்ஷதை தூவி வழிப்பட்டபிறகு ஐயங்கார் அக்ஷராப்யாசம் தொடங்கினார். "ஹரிஓம் நமோத்து சித்தம்" என்று சொல்லச் சொன்னார் ஆசிரியர். நான் ஹரி ஓம் நமசிவாய சித்தம் என்றேன். சிவநாமமும் இருக்கட்டும் என்று எல்லாரும் சிரித்தார்கள். ஆசிரியர் "அ ஆ" என்று என் கையைப்பிடித்து எழுதினார். நான் "இதெல்லாம் எனக்குத்தெரியும் ஐயா...அ ஆ இ ஈ என்று எல்லா எழுத்துக்களையும் எழுதியபிறகு, "எங்கண்ணாபோலவே இங்கிலீஷ்

படிக்கணும்; சொல்லித்தாருங்கோ" என்றேன். "அதிகப்ரசங்கி! வாத்தியார்சொன்னபடி கேள்"....என்றார் எந்தை. நான் சுயமாகக் கற்றதை யாரும் அறியார். ஐயங்கார் தமக்குத் தெரிந்த A B C D சொல்லிவைத்தார். பிறகு காப்பரிசி பருப்புத்தேங்காய் எல்லாம் அங்கிருந்த மாணவருக்குத் தந்தை அன்புடன் தந்தார். நான் பூஜைபண்ணின வெல்லப்பிள்ளையாரை எடுத்துச் சாப்பிட்டுவிட்டேன்! 'அடாடா" என்றார் ஆசிரியர். மாணவரோ "வெல்லப் பிள்ளையார் மிழுங்கிடோய்" என்று என்னைக் கேலி செய்தனர்.

* * * *

24. இங்கிலீஷ் படி

மறுநாள் முதல் காலை பழையது சாப்பிட்டு, நான் ஐயங்கார் பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன். முப்பத்தைந்து பையன்கள் அங்கே படித்தார்கள். அன்று நடந்த கோலாட்டத்தில் நானும் பங்குகொண்டு ஆவேசமாகக் குதித்தேன். "ஸ்ரீராம சந்திரனே ஸ்ரீலோலசுந்தரனே ஸ்ரீமந்நாராயணனே ராம் ராம் ராம்" என்பது முதல்பாட்டு. பிறகு "சுத்தப்ரம்ம பராத்பரராம்" இப்படி பக்திரசப் பாடல்களையே அவர் சொல்லிவைத்தார். என்னிடம் அவருக்குத்தனிப் பிரியம். எனக்கும் அவரிடம் பற்றுதலுண்டு. அவர் மகன் என் சிநேகிதன். நான் எழுதப்படிக்க அதிவிரைவில் கற்றேன். பிறகு பெத்த பாலசிட்சை, நீதிசதகம், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி இவை பாடமாயின; எல்லாம் மூன்றேமாதம். பிறகு மிந்திரிலக்கம் குழிமாற்று வட்டிக்கணக்கு கடைக்கணக்கு தொடங்கின.

என் மூத்த அண்ணா என்னை ஆங்கிலப்பள்ளிக்கூடத்திற்கு இழுத்துச் சென்றான். நான் இடக்குப்பண்ணினேன். முன்னே கண்ட பிரம்படிக்காட்சி என்முன் நின்றது. முதல் நாள் முதல் வகுப்பில் அமர்ந்தேன். மறுநாள் "அண்ணா! நான் இங்கிலீஷ் பள்ளிக்குப் போகமாட்டேன்" என்றேன். "மாட்டாயா? போடா!" ஒரு கல்தா...பத்தடி முன்சென்றேன்...பிறகு ஒரு கல்தா இருபதடி....திரும்பிப்பார்த்தேன்..."பார்க்கிறாயா படவா!" மற்றொரு தள்ளு...முன்னே ஓடினேன்; அண்ணா தனது நண்பருடன் பேசிகின்றான். நான் அதிவேகமாக வைத்தியம்பிள்ளை மடத்திற்குள் நுழைந்தேன். கொல்லைவழியே சந்தைக்குள் புகுந்தேன். அன்று சந்தைக்கூட்டம். கூட்டத்தூடு விழுந்தடித்து ஓடி, நோரகரங்கையங்கார் பள்ளிக்கூடத்திற்கு வந்து, எனது நண்பன் ராமுவிடம் கதையைச் சொன்னேன். அவன் "என்வீட்டில் இரு" என்றான். "வேண்டாம். ஊர்சுற்றுவோமடா...ஆத்தாவூருணிக்குச் செல்வோம்" என்று புறப்பட்டோம்.

வழியில் மேளக்கார மாயாண்டியின் வாத்தியம் கேட்டுச்சிறிது மண்டை உருட்டினோம். பிறகு ராமு ஆவாரங்காட்டு துரையிடம் என்னை அழைத்துச்சென்றான். அங்கே சில துறவிகள் இருந்தனர். அவர்கள் சித்தர்பாடல் பாடக்கேட்டேன். நானும் பராபரக் கண்ணி பாடினேன். அதைக்கேட்ட ஒரு பாட்டி என்மேல் பிரியங் கொண்டு "கதை சொல்லுகிறேன் கேள்" என்று தொடங்கினாள்.

13

வெளியே சென்றிருந்த சர்மா திரும்பிவருகையில் இரண்டு வாத்யாரம்மாவும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அசட்டுச்சிரிப்பு சிரித்தவாறு "ஹி ஹி…ஹி…வாருங்கள், வாருங்கள்!…வெகுநேரமாயிற்றே!" என்றார்.

இதற்குள் பாட்டுவாத்யாரம்மாள் "சற்றுநேரம்தானாயிற்று; கலாவதியம்மாள் ஊரிலிருந்து வரவில்லையாமே! எப்போது வருவார்கள்? இப்போதுதான் ஒருஆள் வந்து சொன்னார்" என்றாள்,

இதைக்கேட்டதும் சர்மாவின் கோபம்பூராவும் தேவநாதன் மீதுதான் பாய்ந்தது. அவன் வேண்டுமென்றுதான் இம்மாதிரி தன்னையும் தன் மனைவியையும் அவமானப்படுத்துவதற்காகக் கூறியிருக்கிறான் என்று திட்டமாக எண்ணி, ஆத்திரத்துடன் "எந்த முட்டாள் சொல்லியது? கலாவதி காலையிலேயே வந்தாயிற்றே! இருங்கள்; அழைத்துவருகிறேன்."...என்று தடதடவென்று மாடிக்குப் போய் முதலில் தன்மகனது விடுதியைப் பார்த்தார்.

அங்கு தேவநாதனைக் காணவில்லையாதலால் தேவகியின் விடுதியைப் பார்த்தார். அங்கு இருவரையும் காணாததால் எங்கு போயிருப்பார்கள்என்று யோசித்தபடியேசந்தேகத்துடன்கலாவதியின் விடுதிக்கு வந்து கதவின் இடுக்கால் எட்டிப் பார்த்தார். கலாவதி மட்டும் குப்புறப்படுத்திருப்பதைக் கண்டு ஒருவாறு சந்தேக நிவர்த்தியுடன் மாடிபூராவும் விடுபூராவும் ஒரு சுற்றுசுற்றி வந்தார். இருவரையும் காணாததால் ஒன்றுமே விளங்காது, "யார் இப்படி சொல்லியிருப்பார்கள்?"...என்ற சந்தேகத்துடன் மறுபடியும் மாடிக்கு வந்தார். கீழே இரண்டு வாத்யார்களும் பேசிக்கொள்வது இவர் காதில் அரைகுறையாகக்கேட்டுத் தம்பித்து அப்படியே நின்றுவிட்டார். அவரையும் அறியாமல் ஏதோ சங்கடம் செய்தது.

மாடிக்குச்சென்ற சர்மாவைப் பார்த்ததும் பாட்டுவாத்யாரம்மாள் ஒருமாதிரி சிரித்துக்கொண்டு தையல்வாத்யாரைப் பார்த்து "இவரை உங்களுக்கு முன்பே தெரியுமா! கலாவதி சர்மா என்பது யாரு? இவருடைய மகளா! அல்லது மருமகளா?...

தையல்:—உனக்கு விஷயமே தெரியாதா! இந்த ப்ரக்ருதியின் பெயர்தான் விச்வநாத சர்மா என்பது; இவர் பாவம் இளம் பெண்ணை நான்காந் தாரமாக இப்போதுதான் விவாகம் செய்து கொண்டு வந்திருக்கிறார். அந்த துரத்ருஷ்டப் பெண்ணுக்குச் சந்தோஷமும் பொழுதுபோக்கும் உண்டாக்குவதற்காக இந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார். இதனுல் அந்தப் பெண் எவ்வளவு சந்தோஷமடைந்து பூரிக்கப்போகிறுளோ! யார் கண்டது?

பாட்டு:—அட க்ரகசாரமே! விஷயம் இப்படியா முடிந்தது? நேற்றுதான் நான் தயாநிதி (வை. மு. கோ. 55-வது நாவல்) என்கிற ஒரு புத்தகத்தைப் படித்தேன். அதைப் படிக்கும்போது எனக்குண்டான வியப்புக்கும் அதிர்ச்சிக்கும் கணக்கிடவேமுடியாது தவித்தேன். குழந்தைகள் இருக்கும் கிழவனைத்தான் நான் மணப்பேன் என்று நித்யகல்யாணி சொல்லியதையும் கிழவன் அவளை நடத்தியதையும் பிறகு நடந்த சம்பவங்களையும் எனக்கு மறக்கவே முடியவில்லை. இப்படியும் ஒரு மனுஷ்யன் இருப்பானு என்று திகைத்தேன். கதை படித்தநாகவேதோன்றுமல் கண்ணீரை வடித்தேன். பிறகு என்னை நானே தேற்றிக்கொண்டு, "சே...இது கதைப் புத்தகந்தானே, உண்மையில் இப்படிகூட நடக்குமா?" என்று சமாதானம் செய்துகொண்டேன். இப்போது நேரில் பார்க்கும் போதல்லவா உலகத்தின் விசித்ரநாடக பாத்திரங்களின் உண்மை

தரிசனம் நன்கு தெரிகிறது. அடாடா! இம்மாதிரியான சம்பவங்களையெல்லாம் ஆசிரியர்கள் நேரில் பார்த்தும் கேட்டும் அறிந்தும் இருப்பதனால்தான் தத்ரூபமாக எழுதுகிறார்கள். எனக்கு இப்போது எழுதும் சக்தி இருந்தால் இத்தக்கிழவனின் கதையை உடனே எழுதிவெளியிட்டு அம்பலமாக்கிவிடுவேன். அத்தனை ஆத்திரம்வருகிறது...... அந்தக் கிழம் மேலே போனது வரவே இல்லையே... இதென்ன வேடிக்கை?....

தையல்:—வருவார் வருவார்!...பயப்படாதே, பாவம்! அந்த இளநங்கையைச் சரிப்படுத்தி அழைத்துவரவேண்டாமா... அது கிடக்கட்டும். வீட்டிலுள்ள இவருடைய பெண்ணை எங்கே காணவில்லை!

பாட்டு:—அடாடா! இவருக்கு பெரிய பெண்கூட இருக்கிறாளா!

தையல்:—சரிதான் போ! இவர்களைப்பற்றி எந்த தகவலும் உனக்குத் தெரியாதா? பெரிய பெண் மட்டுமல்ல. பிள்ளைகூட சரியான கல்யாண வயதுடைய வீரவாலியன் இருக்கிறான். லக்ஷணமாக அவனுக்கு விவாகத்தைச் செய்துவைத்துத் தான் பார்த்து மகிழ்ந்து கண்ணியமாய்க் குடும்பத்தை நடத்தாமல் சாரங்கதரன் சரிதையைப்போல் ஒரு சித்ராங்கியைத் தானே மணந்து வந்துவிட்டார். எது எப்படிப்போனால் நமக்கென்ன? நமக்கு மாதா மாதம் சம்பளமும் பிழைப்பும் உண்டாகிறது. அவ்வளவுதானே!

பாட்டு:—அப்படியா சமாச்சாரம்? இம்மாதிரி குடும்பம் உருப்படுமா! எத்தனையோ இடங்களில் சிறியவயதில் இரண்டாந்தாரம் செய்துகொண்டதே உருப்படாமல் சண்டையும் பூசலும் குடும்பங்களில் பிரிவினைகளும் அப்பப்ப! சொல்லமுடியாத வேடிக்கைகளை நானே பலஇடங்களில் பார்த்திருக்கிறேன். இம்மாதிரி வயது பிள்ளையை வீட்டில் வைத்துக்கொண்டு இப்படி ஒரு காரியம் செய்தால் எப்படித்தான் இந்த குடும்பம் சீராக நடக்கும்?

தையல்:—அந்த விசாரம் நமக்கெதற்கு, நமது வேலைக்குக் குந்தகமில்லாமல் எத்தனைநாள் நடக்கிறதோ பார்க்கலாமே!—என்று இவர்கள் பேசுவதை மாடி வராண்டாவில் நின்று கேட்டுக்கொண்டிருக்கும் சர்மாவுக்கு எரிமலையே தலைமீது விழுந்துவிட்டது போன்ற அதிர்ச்சி உண்டாகியது. தலையை இறுகப்பிடித்துக்கொண்டு நேரே மறுபடியும் கலாவதியின் தனிவிடுதிப்பக்கம் சென்றார்...

இதற்குள் கிழவரே ப்ரமிக்கும் வண்ணம் கலாவதி வெகு சாந்தத்துடன் நேரே கீழேசென்று அங்கு நிற்கும் வாத்யார்களைப் பார்த்து "அம்மணீ! மன்னிக்கவேண்டும், மக்களை முதலில் படைக்கும்போதே ப்ரம்மதேவன் தலையில் எழுதும் எழுத்துச் சரியாக எழுதியிருந்தால் பிறகு மனிதர்மூலம் பல பாஷைகளை எழுதவும் பல கலைகளைக் கற்கவும் செய்யலாம். பகவான் என் தலையில் எழுதிய எழுத்தின் உருப்படி எனக்கு இப்போது புரிந்துவிட்டது. அதுவே என்னுயுள்வரையில் போதும். நான்

வேறு எதையும் யாரிடமும் கற்கவேண்டிய அவச்யம் இப்போது எனக்குக் கிடையாது. ஆகையால் பெரியவர் சொல்லியதை மாற்றித் தாங்கள் போய்வரலாம். ஒரு சமயம் நான் கற்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது நான் தங்களை அழைக்கிறேன்." என்று திகைப்புறும்வண்ணம் கூறிவிட்டு தடதடவென்று மேலேசென்றாள்.

இதையும் கவனித்து திக்ப்ரமைபிடித்துவிட்ட சர்மா கலாவதியின் விடுதியை எட்டிப்பார்த்தார். துணிமணிகள் மூட்டைகட்டியிருப்பதும் படுக்கையும் ஒன்று தனியாகக் கட்டியிருப்பதும் பார்த்துத் திடுக்கிட்டவாறு நிற்கையில் கலாவதி மாடிக்குவந்தாள். "தயவுசெய்து ஒருவண்டி கொண்டுவந்தால் தேவலை. நான் ஊருக்குப்போகவேண்டும்" என்றாள்.

கிழவரை ஒருமுழ உயரம் தூக்கிவாரிப்போட்டது. "என்ன! என்ன! ஊருக்குப்போகவேண்டுமா? எந்த ஊருக்கு?" என்று பதைக்கக் கேட்டார்.

கலா:—எந்தஊருக்கா! என்னை விதி அழைக்கும் ஊருக்குத் தான்போகிறேன். "கணவனுக்கு அடங்கிவாழவில்லை. ராக்ஷஸி" என்று என்னை உலகம் பழிப்பதற்காகத்தான் தாங்கள் இந்த அஸம்பாவிதமான காரியத்தைச் செய்தீர்கள். எத்தகையோரும் சாதாரணமான கட்டாந்தரையில் கூட சிறுசிறு தொட்டியிலாவது செழுமையான செடிகளைப் பயிர்செய்து புஷ்பங்களைக்கண்டு மகிழவும் அதை பகவதர்ப்பணம் செய்யவும் ஆசித்து அதற்கான முறையில் உழைப்பார்கள். ஆனால், இந்தப் பாவியின் விதி நல்லசெழுமையாய் பசுமையாய் குளுகுளு என்று வளர்ந்துள்ள பூங்காவனம் போன்ற குடும்பத்தைச் சின்னபின்னமாய்ச் சிதறவடித்துப் பாழாக்கி நாசமடைய அமைந்துவிட்டதைச் சகிக்கமுடியாது நான் கிளம்புகிறேன். நான் காலை வைத்த உடனே உங்கள் வீட்டிலுள்ள வைபவத்தைக் கண்ணாடியில் காண்பதுபோல் பூர்த்தாகிவிட்டது"...
என்று கூறுவதைக்கேட்டு ஒன்றும்புரியாமல் விழிக்கும் கிழவர் இடைமறித்து "கலாவதி! என்ன சொல்லுகிறாய்! நீசொல்லுவது எனக்கொன்றுமே விளங்கவில்லையே? குடும்பமாவது, பூங்காவனமாவது, பாழாவது,? நீ எதை மனத்தில் எண்ணிப்பேசுகிறாய்?".... என்று சற்றுத் தடுமாறியபடியே கேட்டார்.

"ஏன்? புரியாமல்படிக்கு நான் பூட்டகமாய் எதுவுமே சொல்லவில்லையே! ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எத்தகைய பாடாவது பட்டு செல்வத்தைச் சம்பாதித்துவிடலாம்; கூலிவேலை செய்தால் கூட காலணா கையில் வந்துவிடும். ஆனால், மக்கட்செல்வத்தை அத்தனை சுலபமானவழியில் பெற்றுவிட எத்தகைய தேவதேவர்களாலும் முடியாது என்பது நினைவிருக்கட்டும். ஒரு குழந்தையை வேண்டி பல உலகமக்கள் கிடக்கும் தவத்தை நானறியாமலில்லை. அத்தகைய பாக்யத்தை நீங்கள் அடைந்தும் வாய்கூசாது, மனங்கூசாது அவர்களைப் பயித்தியம் சோதா போக்கிரி என்றெல்லாம்

கூறி, என்னை மகிழ்விக்கப்பார்க்கும் நீங்கள் அடைந்த பலன் என்ன வென்பதை இப்போதுஉணராவிடினும்இனியாவது உணருவீர்கள். உங்கள் மக்கட்செல்வம் உங்களை விட்டகன்றுர்கள். இத்தனை கால மாகவிருந்த வேலைக்காரியும் போய்விட்டாள். சமையல்காரனும் மூட்டைகட்டிக்கொண்டிருக்கிறுன். இந்த வீட்டில் நான் காலை வைத்தவுடனேயே இத்தனை அலங்கோலமாகிவிட்ட இந்த வடுவை என்றும் மறைக்கவே முடியாது. இம்மாதிரி நீங்கள் பொய் சொல்லி விவாகம் செய்துகொண்டதை நான் கட்டோடு விரும்ப வில்லை. என்விதியைப் பார்த்துக்கொண்டு போகிறேன். உங்கள் பெண்ணும் பிள்ளையும் பழைய வேலைக்காரியும் எப்போதும் போல் என்று வீட்டிற்கு வந்துசேருகிறுர்களோ, அன்று நானும் வருகிறேன். அதுவரையில் இந்தப் பாலைவனவாழ்க்கை எனக்கு வேண்டாம். உலகம்என்னை எப்படி பிருப்பினும்தூற்றப்போகிறது. கணவனை மதிக்காமல் ஓடிவிட்டாள் என்றுகூடக் கூசாமல் சொல் லும். உரலில் தலையைக் கொடுத்தபிறகு இனி உலக்கைக்குப் பயப் பட்டால் முடியுமா? என்னைப்பற்றி உலகமகாஜனங்களின் தினக் குறிப்பில் எப்படியாவது பேசிக்கொள்ளட்டும். பகவானின் தின சரிக்குறிப்பில் என்னைப்பற்றிச் சரியானபடி பதிவாகிஇருந்தால் போதும். உடனே நான் புறப்படவேண்டும்"...என்று படபடத் துக் கூறினுள்.

அதுவரையில் தன் மக்கள் வீட்டில் இருக்கிறுர்களா, இல் லையா! என்பதைப்பற்றியே எண்ணுதிருந்த சர்மா அவர்கள் வீட்டிலில்லை; வெளியேறிவிட்டார்கள் என்பதை இப்போதுதான் தெரிந்துகொண்டு நடுநடுங்கியவாறு ப்ரமித்து நிற்கையில் கலாவதி பெட்டியுடன் விருவிரென்று நடப்பதைக் கண்டு "கலாவதி! கலா வதி!...நில்லு...நில்லு....போகாதே. இப்படி வா" என்று துடிதுடிப்புடன் தீனகுரலில் கூப்பிட்டார்.

கலா:—இப்படியும் அப்படியும் வருவதற்கு இப்பொழுது நேர மில்லை. ரயில் தப்பிவிடும். உடனே புறப்படவேண்டும். உங்கள் வீட்டு விவகாரங்கள் முதலில் சரியாகட்டும். பிறகு நான் வருகி றேன்—என்று பின்னும் இரண்டடி வைத்தாள்.

எத்தகையோருக்கும் ஒருவிதமான வீராவேச உணர்ச்சி வருவதென்றுல் அது மனிதர்களின் எண்ணத்திற்கே எட்டாத நிலைமையில் ஒரு சம்பவமோ, அதிர்ச்சியான விஷயத்தைப்பார்க் கவோ, கேட்கவோ நேரிடும்போதுதான் தன் கட்டுக்குமீறிய மிருகாவேசம் உண்டாகி அடுத்தக்ஷணம் அந்த ஆவேசம் ஆறிய சமயம் தன்னைத்தானே நோகும்படியாகக்கூட சிலசமயம் நேர்ந்து விடுகிறது. அப்படியே சர்மாவுக்கும் தன்னுடைய வாழ்நாள் எப் படியெல்லாம் கழியவேண்டும் என்று தானே ஒரு பெரிய திட்டம் போட்டுக்கொண்டு அதேருசியில் கொட்டாவி விட்டுக்கொண்டி ருக்கையில் இத்தகைய எதிர்பாராத நிலைமை ஏற்பட்டதாலும் தன் மக்களே தனக்கு த்ரோகம் செய்துவிட்டதாக ஒரு விபரீதஎண்ணம்

உண்டாகிவிட்டதாலும் எல்லாமாகச்சேர்ந்து ஒரே மூர்க்காவேசத்தைக் கிளப்பிவிட்டது. உடனே கலாவதியின்மீது பாய்ந்து அவள் கையைப்பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டுவந்து அவளுக்கென கொடுத்திருந்த தனிவிடுதியில் தள்ளிக் கதவை தடாரென்று சாத்தி வெளியில் பூட்டிவிட்டு "கலாவதீ! அஷ்டதரித்திரத்தில் பிறந்துள்ள உனக்கே இத்தனை ஆணவமும் திமிரும் இருந்தால் பணத்தில் பந்தாடும் எனக்கு எவ்வளவு இருக்கவேண்டாம். இந்த இடத்தைவிட்டு நீ எங்கும் போகக்கூடாது. நீ இனி என் கையில் அடங்கிய சரக்கு என்பதை மறக்கவேண்டாம்"...என்று கர்ஜனை செய்தவாறு சமயல்காரனை கூப்பிட்டார்.

ஏற்கெனவே இந்த நாடகங்களை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்ததால், அவன் தனக்குள் தீர்மானம் செய்துகொண்டு தயாராயிருந்த சமயம் சர்மா கூப்பிட்டதால், நேரேவந்து "சார்! வீட்டின் மகாலக்ஷ்மிபோன்ற தாய் இறந்தவுடனேயே தரித்திரம் பிடித்துவிடும் என்று சொல்வார்கள். ஆனால், அத்தமாதிரி இதுவரையில் எதுவும் நடக்காதிருந்தது. அந்த அம்மாளின் ஆத்மா சதா வாழ்த்திக்கொண்டிருந்ததனுல்தான், க்ஷேமமும் பொங்கியிருந்தது. இன்று காலேமுதல் நடக்கும் சம்பவங்களைப் பார்த்ததும் அந்த பழமொழியின் ஆட்சி ஆரம்பமாகிவிட்டது என்பது தெரிந்துவிட்டது. வீட்டில் இத்தனை வருஷமாகக் கட்டிக்காத்த கிழவி முதலில் போயாயிற்று. வீட்டுக்குழந்தைகள் பிறகு போயிற்று. ரத்னம் போன்ற குழந்தைகளுக்காகவும் எஜமானியம்மாள் ப்ராணன் போகும்போது சொல்லியதற்காகவும்தான் நான் இத்தனை நாள் இருந்தேன். அதோடு, அப்பழுக்கற்ற குழந்தைகளுக்கே வாய் கூசாமல் பயித்தியம் என்று சொல்லியபிறகு எனக்கு இன்னும் என்னென்ன பட்டங்கள் பதவிகள் வருமோ! நான் பிள்ளை குட்டிக்கார ஸம்ஸாரி. இரண்டாந்தாரம் விவாகம் செய்துகொள்ளும் எத்தகையோருக்கும் சந்தேகப்பிசாசு பிடிக்காமலிருக்காது. அம்மாதிரி பிடித்து ஒரு கருப்புப்புள்ளியுடன் என்னைத் துரத்துவதற்கு முன்பே நான் இந்த ஸன்னிதானத்திலிருந்து விடைபெற்றுக்கொள்கிறேன். என்னுடைய சம்பளத்தைத் தீர்த்துக்கொடுத்தால் கொடுங்கள். இல்லாவிட்டால் வேண்டாம்" என்று கூறிவிட்டு பதிலுக்கு எதிர்பார்க்காமல் போய்விட்டான்.

கிணறுவெட்டப் பூதம் கிளம்பியது என்கிற பழமொழியை எப்படித்தான் உண்மையாகச் செய்தார்களோ தெரியாது. தற்சமயம் அந்த வேதனையும் பயங்கரமும் சர்மாவின் வாழ்க்கையில் ப்ரத்யக்ஷமாகிவிட்டன.

14

தேவகியை அழைத்துச்சென்ற தேவநாதன் நேரே கண்ணம்மாள் வீட்டிற்குச் சென்றான். ஏற்கெனவே இவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அவள் ஓட்டமாக ஓடிவந்து

தேவகியை சேர்த்தணைத்துக்கொண்டு "தேவகி! அழாதேம்மா! பகவான் எல்லாம் நல்லதற்காகத்தான் அவ்வப்போது நடத்திக் கொண்டுபோகிறார். என் தாயார் நான் ஊருக்குப்போய்விடு கிறேனே என்று வருத்தப்பட்டுக்கொண்டேயிருக்கிறாள். அதனால் தான் உன்னைக் கடவுள் காட்டினார். அம்மாவுக்கு நீவரப்போவதைச் சொல்லியதும் எவ்வளவு சந்தோஷமாகிவிட்டது தெரியுமா!... அம்மா!... அம்மா!...தேவகி வந்துவிட்டாள்" என்று கூறியவாறு தேவகியை உள்ளே அழைத்துச்சென்றாள்.

கண்ணம்மாளின் தாயார் பழய சினேகத்தையும் அன்பையும், தேவகியின் தாயார் இருந்த அதிப்ரீதியையும்மட்டும் எண்ணி, மத்தியில் உண்டாகிய த்வேஷத்தை அடியோடு மறந்து தேவகியை தாயன்பின் வாத்ஸல்யம் தோன்றக் கட்டித்தழுவி "கண்மணீ! அழாதே! உன்தாயார் நான்தான் என்று எண்ணிக்கொள்ளு. முதலில் நீங்களிருவரும் சாப்பிடவாருங்கள். தேவநாதா! நீ என்னவிருந்தாலும் புத்திசாலியப்பா! விரோதத்தை வளர்ப்பவர்கள் வேர்ப்புழுதுக்குச் சமானம் என்று என்தாயார் அடிக்கடி சொல் வாள். நீ வயதில் சிறியவனாக இருப்பினும் இதுவிஷயத்தில் மிகவும் பாரபுத்தியுடன் இருப்பது எனக்குப் பரமசந்தோஷமாயிருக்கிறது. என் கணவரிடங்கூட நான் விரோதத்தை மறந்து சினேகபாவமாய் இருக்கும்படி எத்தனையோதரம் சொல்கிறேன். அவருக்கு அந்தப் பரிபக்குவம் உண்டாகவில்லை. முதலில் சாப்பிடவாருங்கள்." என்று அன்புகனிய அழைத்து இருவருக்கும் ஆகாரத்தைப் பரிந்து ஊட்டினாள்.

உண்மையில் தேவகிக்கு அபோமயமான துக்கத்துடன் அழு வதைத்தவிர வேறு எதுவுமே தெரியவில்லை. தேவநாதனுக்குமட்டும் தன்னுடைய சகோதரியைச் சரியான இடத்தில் கொண்டு சேர்த்துவிட்டதில் அலாதியான மனச்சாந்தியும் த்ருப்தியும் உண் டாகியது. இத்தனை விரோதம் உள்ளவர்களிடம் கொண்டுவிடு கிறோமே என்று அவனுக்குத் தோன்றவில்லை. எப்போதும் பெண் களின்உள்ளம்மிகவும் இளகியது, பச்சாதாபம்நிறைந்ததுஎன்பதால் தன் தாயாரும் அந்த அம்மாளும் ஆதிமுதல் சினேதபாவமாயிருந்த தால் இந்த காரியத்திற்குச் சற்றும் வித்யாஸ மனப்பான்மையே உண்டாகவில்லை.

சற்றுநேரத்திற்கெல்லாம் வெளியே சென்ற கணேசன் வந்தார். அவரைப்பார்த்தவுடனே தேவநாதன் "மாமா! நமஸ்காரம்" என்று கூறிப் பின்னும் ஏதோ சொல்வதற்கு வாயெடுப்பதற்குள் "போடா அசடே! நமஸ்காரமாவது கத்திரிக்காயாவது? சற்றுமுன்பு தான் கண்ணம்மா சகலவிஷயத்தையும்கூறி வருத்தப்பட்டாள். எனக்குக்கூட தேவகியை எண்ணிக் கண்ணீர் வந்துவிட்டது. உங்கப்பா ஒரு மனிதனா? மிருகமல்லவா?...கல்யாணமாம், கல் யாணம்! கண்ணம்மாவை அந்தக் கிழட்டுப் பிணத்திற்குக் கொடுக்க வில்லை!' என்கிற ஆக்ரோஷத்தில்தான் அப்போது அம்மாதிரி

தலைவிரித்தாடியதாம். அதை பிறகு மாணிக்கத்தின்மூலம் தெரிந்து கொண்டேன். சரி அதுகிடக்கட்டும். முதலில் சாப்பிட்டீர்களா! என்ன கண்ணம்மா! தேவகியை இன்னும் சமாதானம்செய்யா திருந்தால் எப்படியம்மா!.... தேவகீ! அம்மா இப்படிவா! அழா தேம்மா! உங்கப்பா இன்னும் என்ன செய்வாரோ என்று பயப் படுகிறாயா! ஒன்றும் தலையை வாங்கிவிடமாட்டார்...இதோ பாரம்மா!...கண்ணம்மா இன்று அவள் கணவருடன் ஊருக்குப் போய்விட்டால் எப்படி அவளைப் பிரிந்திருப்பது என்ற ஏக்கத் துடன் இரண்டுமாதம் லீவு வாங்கிக்கொண்டேன். நாளையதினமே நாங்கள் க்ராமத்திற்குப் போகிறோம். அது நல்ல பெரிய க்ராமம். நிறைய வீடுகளும் மிராசுதாருடைய நெல்லுமெஷின், மாவுமெஷின் தண்ணீர்மெஷின் டயனமோவைத்த மின்ஸார விளக்குகள் கடை கடைத்தெருவு ரயில்வேஸ்டேஷன் ஆஸ்பத்ரி பள்ளிக்கூடம் முத லிய பலவிதமான பொழுதுபோக்குச் சாதனங்கள் இருக்கின்றன.

என் வீடும் ப்ரமாண்டமாயிருக்கிறது. நல்ல சுகாதார வசதி உண்டு. ஆகையால் நாளையே நாம் அங்கு போய்விடுவோம். இரண்டுமாதப் படிப்பு உனக்குக்குறைந்தால் பாதகமில்லை. இன்றே உன் வாத்யாரம்மாளிடம் போய் லீவு சொல்லிவிட்டு வா! நீ பிறந் ததுமுதல் க்ராமவாழ்க்கையைப் பார்த்ததுகூட கிடையாது. ஆகை யினால் நீ அவச்யம் அதை ரஸிப்பாய் என்று நான் நினைக்கிறேன். என்னப்பா தேவநாதா! நீயும் ஒருவாரம் லீவு வாங்கிக்கொண்டு எங்களுடன் வந்திருந்து தேவகியைச் சமாதானப்படுத்திவிட்டு வந்தால் தேவலை" என்று மெஷின்போல் மூச்சுவிடாமல் பேசினார்.

அன்றிரவே கண்ணம்மாளை ஊருக்கனுப்பிவிட்டு மறுநாளே எல்லோரும் சேர்ந்து க்ராமத்திற்கு வந்துவிட்டார்கள். தேவகிக்கு எத்தகைய பலாக்குகள் காட்டியபோதிலும் ஏதோ கிலிபிடித்த மாதிரியே ஒன்றிலும் பற்றுதல் இல்லாமல் இருக்கிறாளேயன்றி கலகலப்பே காணவில்லை.

தேவநாதன் க்ராமாந்திரங்களுக்குப்போகவும் அந்த ஜனங் களுடன் பழகவும் மிகவும் ஆசைகொண்டவனாதலால், அடிக்கடி பல க்ராமங்களுக்குச் சென்று வழக்கமாதலால் அவனுக்கு இந்த இடத்திற்கு வந்ததும் மிக்க மகிழ்ச்சியே உண்டாகியது. எனினும் மகா முரட்டு ஸ்வபாவமுடைய தன் பிதாவின் விபரீதப்போக்கில் என்ன நடக்குமோ! என்ற திகில்மட்டும் அவனை பாதித்துக் கொண்டிருந்தது. விவரம் தெரிந்தவனாதலால் 'என்ன கதியில் வீடு இருக்கிறதோ! புதிய பெண்ணின் நிலைமை எங்ஙனமிருக்கிறதோ!' என்று சதா எண்ணமிட்டவாறிருந்தான்.

அந்த வீட்டின் பின்புறமுள்ளப்ரம்மாண்டமான தோட்டத்தில் ஒரு மரத்தடியில் பதித்துள்ள கருங்கல் ஆஸனத்தில் தேவகி உட் கார்ந்து புலம்புவதைக்கண்ட தேவநாதன் அவளைத் தடவிக்கொடுத்த வாறு "செல்வி! இதென்னம்மா இப்படிப் புலம்புகிறாய்? தாயிக்குத் தாயாக நம்மை அன்புடன் ஆதரிக்கும் இந்தம்மாளின் மனம் வருந்

அம்படி நீ சதா இப்படி வித்யாஸமாய் அழுதுகொண்டிருந்தால் அது எத்தனை தூரம் பாதிக்கும். நீயோ மகாபுத்திசாலி. நமக்கு இந்த சமயத்தில் ஆதரிக்க பகவான்தான் இவர்களைக் காட்டியிருக் கிறார். நானோ ஊருக்குப் போகவேண்டும். நீ சந்தோஷமாய் இந்த அம்மாளுடன் கலகலப்பாயிரும்மா!...எதற்காக இப்படிச் சதா அழுகிறாய்?" என்று அன்பு ததும்பக் கேட்டான்.

தேவகி:—அண்ணா! நானும் அந்த அம்மாளின் மனம் வருந் தாமல்தான் நடந்துகொள்கிறேன். இருப்பினும் என்னை யறி யாமல் துக்கம் பொங்கிவந்துவிடுகிறது. நமக்கு திடீரென்று இத் தகைய ஒரு சோதனை காலம் வரும் என்று கனவுகூடக் காண வில்லை. இப்போதுதான் நமது அம்மாவின் மறைவு நன்றாகத் தெரி கிறது. ஐயோ பாவம்! நம்மையே நம்பி உயிர்வாழ்ந்துவந்த மாணிக்கத்தின் கதி என்னவாயிற்றோ? அவள் நமக்காகத்தானே தன்னுடைய சொந்த மனிதர்களைக்கூடத் துறந்து நம்மைக் காப் பாற்றினாள். இப்பொழுது அவள் எங்கே போயிருப்பாள்? அவளை அவள் மக்கள் சேர்க்காமல் கைவிட்டுவிட்டால் என்ன செய்வாள் பாவம்? அதை நினைக்கத்தான் எனக்கு வருத்தம் அதிக மாகிறது. அவள் நமக்காகச் செய்த நன்றியை மறந்து அவளை அப்பா துரத்தினது கொடுமையிலும் கொடுமையல்லவா? அதை நினைத்தால்தான் மிகவும் துக்கமாக இருக்கிறது.

தேவநா:—நான்மட்டும் அதைப்பற்றி நினைக்கவில்லை என்று நினைத்தாயா? அவளை நான் மறந்துவிடமாட்டேன். அவளைத் தேடிப்பிடித்து அழைத்துவந்து உனக்குத் துணையாக வைத்துவிடு கிறேன். உனக்கு நன்றாகப் பொழுதுபோவதற்கும் பரோபகார மான முறையில் பயன்படுவதற்குமான வழி ஒன்று உனக்குக் கிடைத்திருக்கிறது.

தேவகி:—அதென்ன வழி அண்ணா?...

தேவநா:—அதைத்தானம்மா சொல்லவந்தேன். நம் நாட்டின் இத்தகைய சீர்கேடான நிலைமைக்கு முக்யகாரணம் நம்நாட்டுச் செல்வம் முற்றும் பிறநாட்டுக்குக் கொள்ளைபோவது மட்டுமல்ல. நம் நாட்டு மக்களுக்குக் கல்வியறிவு க்ஷீணமாகி அறியாமையே ப்ர தானமாகிவிட்ட பெருங்குறைதான் முக்யமாக நாசத்தை விளை வித்துவிட்டது. வெளிநாட்டின் கல்வி அபிவ்ருத்தியையும் நம் நாட்டுக் கல்வி நிலைமையையும் சீர்தூக்கிப்பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்யாஸம் வெகு நன்றாகத் தெரிகிறது. அந்த நாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர்கள் படித்தவர்கள் என்றால் நம்நாட்டில் தொண்ணூறுபேர்கள் படிக்காதவர்கள் இருக் கிறார்கள்! இந்த மகத்தான வித்யாஸத்தினால்தான் நம் நாடு படு மோசமாகிக்கொண்டுவருகிறது. அதனால்தான் முதியோர் கல்வி திட்டத்தை மிகவும் தீவிரமாகப் பரப்பிவருகிறார்கள். நானும் அது விஷயத்தில்தான் நம் பட்டணத்தில்கூட உழைத்துவருகிறேன்.

அதெல்லாம் அப்பாவுக்குப் பிடிப்பதில்லை; அவருடைய கவுரவத்திற்கு அது மிகவும் இழிவாம். இப்போது அவர் செய்துள்ள காரியத்தின் நிலைமையை அவர் அடியோடு மறந்து என்னை திட்டம் செய்து கட்டுப்படுத்தினர்.

நான் அவருக்குத் தெரியாமல் இந்த வேலையை ப்ரதிதினம் இரவில் நடத்திவருகிறேன். என் சிநேகிதர்களும் என்னுடன் ஒத்துழைக்கிருர்கள். நான்கு இடங்களில் இந்தமாதிரி வகுப்புக்கள் வைத்து நடத்துகிறோம். ஒவ்வொருவர் ஒவ்வொரு வகுப்புக்கு பொறுப்பேற்று வருகிறோம். நான் அவ்வப்பொழுது பத்ரிகைகளுக்கு எழுதும் விஷயங்களுக்கு அன்பளிப்பாக வரும் பணத்தை இத்தகைய சிறந்த ஸேவையில்தான் செலவிட்டுவருகிறேன்.

தேவகி:—நிஜமாகவா அண்ணு! இதில் செலவு எதற்காகச் செய்யவேண்டும்? என்ன செலவு இருக்கிறது?

தேவநா:—அதுவா? உனக்கும் இந்த முக்யமான தொண்டில் ஆர்வம் பிறந்துவிட்டால் நீயும் அப்படித்தான் செய்வாய். படிப்பவர்களை ஒன்றுகூட்டி உபதேசம்செய்து எழுத்துக்களைக் கற்பிப்பதற்கு எத்தனை பாடுபடவேண்டும் தெரியுமா!

தேவகி:—என் அண்ணு! அதில் அத்தனை ச்ரமம் எதற்கு? படிப்பதற்கென்று அவர்கள் ஓடிவரமாட்டார்களா?

தேவநா:—உம்... அத்தனை அறிவும் ஆவலும் இருந்துவிட்டால் எத்தனையோ உயர்வாகுமே! அவர்களுடன் முதலில் அண்டிப் பழகுவதற்கே நம்மை விடமாட்டார்கள். வீடுவீடாகச் சென்று பலவிதமான கேளிக்கைகள் நிறைந்த வார்த்தைகளைக் கூறினல் கூட அவர்கள் திருந்திவரவேமாட்டார்கள்... "ஆமாஞ்சாமி! நாங்க படிச்சி இன்ன ஆவணும்?......போங்க சாமி....நாங்க படிக்காமே தான் ராஜ்யம் கெட்டுப்போவுதுங்களா?...அந்த ஒவித்ரியம் எங்களுக்கு எதுக்குங்க?....ஏதோ வேலே செஞ்சு கஞ்சி குடிச்சா போதாதா?...சாமி!...படிப்பும் வாணும் ஒண்ணும் வாணும்...நீங்க வயியோடே போங்க"...என்றெல்லாம் கூறி எங்களைத் துரத்துவார்களேயன்றி ஆவலாக வரமாட்டார்கள். நூற்றுக்கு ஒருவர் வந்தால் அபூர்வம். அதற்காக ஒரு பொது இடத்தில் பஜனைகோயில், சங்கம்...என்று ஒன்று ஆரம்பித்து அதில் பஜனை செய்து சுண்டல், வடை, சர்க்கரை, பழம்...தேங்காய்...முதலியன நைவேத்யம் செய்து அவர்களுக்கு வழங்கி அந்த சமயத்தில் படிப்பின் அவசியத்தை அவர்களுக்கு உபந்யாஸம்போல் சொல்லி, பிறகு அவர்களை இழுத்துக் கல்வி கற்பித்துவருகிறோம். ஆண்மக்களுக்கே இந்த கதியாயிருக்கையில் பெண்மக்களுக்குக் கேட்கவேண்டுமா?

தேவகி:—அண்ணு! நீ சொல்லும்போதே எனக்கு இதில் மிகவும் ஆசை உண்டாகிறது. பெண்மக்களை நான் இவ்வூர் சிவன் கோயில் முன்பக்கம் கூட்டி கல்வி கற்றுக்கொடுக்கிறேன். உண்மையில் இந்த ஸேவை மிக உபயோகமானதாகும். அண்ணு! அப்பாவுக்கு ஏற்கெனவே நம்மீதுள்ள கோபத்திற்கு இன்னும்

சிகரம் வைத்ததுபோல் இப்போது ஆத்திரம் மீறிக் கொண்டிருக்கும். இந்த நிலைமையில் அவர் நம்மைப் படிக்கவைப்பாரோ! அதற்கும் சமாப்திசெய்துவிடுவாரோ! தெரியவில்லை. ஆகையால் க்ராமத்திலிருந்து இத்தகைய ஸேவையையாவது செய்வதை நான் மிகவும் விரும்புகிறேன். அதற்கான ஏற்பாடு செய்துகொடு; ...அதோ மாமி வருகிறார்..."வாங்கோமாமீ" ..என்று கூறி எழுந்து மரியாதை செய்தாள்.

கண்ணம்மாவின் தாயாராகிய காவேரியம்மாள் சிரித்துக் கொண்டே "தேவநாதா! ஏது? தங்கையின் அழுகையை நிறுத்திச் சிரிப்பு வரும்படிச் செய்துவிட்டாயே! என்ன மந்திரம் போட்டாயப்பா! உட்காருங்கள்"...என்று அன்பு ததும்பக் கேட்டாள்.

தேவநா:—எல்லாம் உங்கள் ஆசீர்வாதந்தான் மாமீ! தேவகியின் பொழுதுபோக்கிற்கு ஒரு சரியான வேலையைக் காட்டிவிட்டேன். க்ராமத்துப் பெண்களுக்கு முதியோர் கல்விதிட்டப்படி கல்வி போதிக்கும்படிக் கூறி அதன் விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன். அது அவளுக்கு மிகவும் பிடித்திருக்கிறதாம்.

காவேரி:-அடேடே! வெகு முக்யமான நல்லகாரியமாயிற்றே; என்னவிருந்தாலும் நீ சிறந்த புத்திசாலி என்று நான் சொல்வது சரியாக இருக்கிறது. எனக்குக்கூட இம்மாதிரி விஷயங்கள் மிகவும் பிடித்தமானது. நானும் இவளுக்குக் கூட உதவிசெய்கிறேன். இன்றே இதற்கான ஏற்பாட்டைச் செய்துவிடப்பா! எப்படியிருந்தாலும் தேவகி உத்ஸாகமாயும் சந்தோஷமாயுமிருந்தால் போதும். வாம்மா! கோயிலுக்குப் போய்விட்டு வரலாம்—என்று அன்புடன் அழைத்தாள். எல்லோரும் கோயிலுக்குச்சென்றார்கள். இதுகாறும் கவ்விக்கொண்டிருந்த வக்கம் தேவகிமுகத்தைவிட்டு மறைந்து ஒரு புதிய சுறுசுறுப்பும் தெம்பும் ப்ரகாசிப்பதைக் கண்டு காவேரியின் இதயம் பூரித்தது.

15

மிருகாவேசத்துடன் கலாவதியை இழுத்து உள்ளே தள்ளிக் கதவைத்தாளிட்ட கிழவருக்குச் சமயல்காரன் சொல்லிச்சென்ற வார்த்தைகள் பெரும் தீயில் இவரைத் தூக்கிப்போட்டதுபோன்ற எரிச்சலும் நிலைதடுமாறிய பதைப்பும் உண்டாக்கியதால் "அற்பப் பயலே! என்ன உளறினாய்?"...என்று ஒரு கர்ஜனையைச் செய்தாரேயன்றி, அது அவன் காதில் விழவில்லை என்பதை இத்தனை கோபத்திலுள்ள அவர் எப்படி அறியமுடியும்?

இதன் மத்தியில் கீழே கூர்ஜம் வைத்ததுபோல் வாத்தியாரம்மாக்கள் உட்கார்ந்திருப்பது மறந்தேபோய்விட்டதால் தனது இதயத்தைப் பிடித்து அழுத்தும் ஆத்திரத்தைச் சற்று ஆற்றிக் கொள்ளும் முறையில் ஏதேதோ வாயில்வந்தவாறு திட்டினார். கீழே இறங்கிச்சென்ற சமயல்காரன் திருகத்திருக விழித்துக்கொண்டு

நிற்கும் வாத்தியாரம்மாளைப்பார்த்துஒருமாதிரி உதட்டைப்பிதுக்கிச் சிரித்தபடியே தான் விடைபெற்றுவிட்டதை அறிவிக்கும் சமிக்ஞை யுடன் சென்ருன்.

மேலே கிழவர் கத்துவதையும் சமயல்காரன் செல்வதையும் பார்த்து தமக்குள் ஏமாற்றம், வியப்பு, கிழவன்மீது கோபம், அருவருப்பு முதலிய பல உணர்ச்சிகளை ஒருங்கே அடைந்து சில வினடிகள் செய்வதறியாது நின்றுர்கள். உடனே பாட்டு வாத்யா ரம்மாள் படபடப்புடன் "அம்மா, கலாவதி! சற்று முன்பு நீ சொல்லிய வார்த்தைகள் மிகவும் சரியானவை. அதை நான் வெகு வாய் மெச்சுகிறேன். உன் தலையெழுத்தை நீ அறிந்துகொண் டதுபோல் அந்தக் கிழவருக்கு இத்தனை வயதாகியும் அதை அறிந்து கொள்ளாதது வெறுக்கத்தக்கதுதான். ஐயாவாள் பாடியிருக்கும் "எந்த நேர்ச்சினு எந்த ஜூசினு அந்தவாருலேன காந்த தாஸுலே"... என்ற கீர்த்தனத்தின் ஜீவநாடி ததும்பும் அர்த்தத்தை இன்று இங்கு ப்ரத்யக்ஷமாகப் பார்த்துவிட்டோம்...சார்! நீங்கள் செய் துள்ள அக்ரமத்தை இந்த உலகத்து மக்களிடம் வேண்டுமானுல் மூடிமறைத்துவிடலாம். உலகத்தையெல்லாம் தன் குக்ஷியில் வைத்து ரக்ஷிக்கும் ரக்ஷகனிடம் நீங்கள் எந்தவிதமான மூடுதிரை யும் போடமுடியாது என்பது நினைவிருக்கட்டும். நீங்கள் செய் துள்ள அக்ரம காரியத்தைக் கண்டு நீங்கள் ஏதோ பெரிய சாதனை யைச் செய்துவிட்டதாக ஜெயபேரிகை அடித்து உள்ளுக்குள் எக் காள மிடுகிறீர்கள். ஆனுல் அது அத்தனையும் அபஜெயபேரிகை யின் பயங்கர நாதம் என்பதை மறக்கவேண்டாம். சார்! சுதந்தர மாகப் பறந்துகொண்டிருந்த சுயேச்சைப் பறவையை அனியாய வலையை வீசிப் பிடித்து சிறையிலடைத்து ஒவ்வொரு சிறகை ஒடிப் பதுபோல் ஒடித்துவைத்துள்ள இந்த கிராதகச் செய்கையை கடவுள் பார்த்துக்கொண்டுதானிருக்கிருன். முதலில் கதவுதிறந்து அவளை விடுகிறீர்களா! அல்லது இந்த அடாத செய்கையை நாங் களே உலகறியபஜீத் செய்துவிடட்டுமா? பணம்நிறையப் படைத்து விட்ட பெருமையினுல் ஒரு ஏழைப் பெண்ணின் வாழ்வையே பாழாக்கியதோடுமல்லாமல்கொலைசெய்வதற்கொப்பாக இப்படியா செய்வது?"...என்று பெரியதாகத் தன்னையறியாமல் கத்தினுள்.

அப்போதுதான் கீழே அன்னியர்கள் இருப்பது சர்மாவுக்கு நினைவுக்குவந்து தூக்கிவாரிப்போட்டது. குப்புற விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்று சொல்வதுபோல் தன்மீது தப்பே இல்லை என்றிருக்கும்பொருட்டு "அயோக்ய ராஸ்கல் இத்தனை வருஷமாக நம்பி இருந்த தடியன் சற்றுகூட மரியாதையோ விச் வாஸமோ இல்லாது போக்கிரித்தனமா செய்யப்பார்த்தான். அத் தகைய தடியனை அடித்துத் துரத்தாமல் என்ன செய்வது? நீங்களே கேளுங்கள். பழகிய மனிதன்தானே என்று சகலவிதத்திலும்நம்பி இருந்தேன்.அயோக்யன்!க்ருதஜ்ஞையற்ற மோசக்காரன்.என்மகளி டத்தில்ஏதோ அடாதவிதம் நடந்துகொண்டானும். அதையும் நான்

மன்னித்துவிட்டு அவளைமட்டும் ஊருக்கு அனுப்பினேன். அதையும் மீறி அந்தக் கழுதை கலாவதியிடம்....என்றுசொல்கையில் கேவலம் அலக்ஷியமான பார்வைபார்த்துவிட்டு "போதும் உங்கள் நாடகம், நாங்கள் விஷயமறியாத முட்டாள்களல்ல. இந்தவீட்டு சகவாஸம் போதும்" என்று கடினமாக கூறிக்கொண்டே போய்விட்டார்கள்.

தன்னுடைய நாடகம் எதுவும் பலிக்காமல் போய்விட்டதை எண்ணி ஒருபுறம் துக்கமும் கலாவதியின் பிடிவாதத்தினால் உண்டாகிய ஆத்திரம் ஒருபுறமும் சேர்ந்து ப்ரமாதமாய் உச்சத்தை எட்டிவிட்டது. அப்படி இப்படி நின்று பார்த்தார். மறுபடியும் கலாவதியைப் பூட்டியிருந்த கதவைத் திறக்கப்போகையில் "சார்! சந்தோஷசமாச்சாரம் கேள்விப்பட்டேன். ரொம்ப நல்லதாச்சுன்னு! அந்த நாளில் என்னைக்கூட அப்படிதான் திட்டினார்கள். ஊர் வாயைமூட யாரால் முடியும் சார்! எனக்கு இல்லையைப் பார்த்து சோறுபோட ஒருஆதாரம் தேடிக்கொண்டதால் இப்போது சந்தோஷமாயிருக்கிறேன்." என்று தானே முன்கூட்டிக் கூறியவாறு வந்து சர்மாவின் எதிரில் நின்றார்.

திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல் சர்மாவின் கதியாகிவிட்டது. மறுபடியும் சாவியை இடுப்பில் சொருகிக்கொண்டு "வாருங்கள். வாருங்கள். ஹி......ஹி...இப்படி உட்காருங்கள்... என்னமோ சார்! மனிதவாழ்வே பிடிக்கவில்லை." என்று அவர் முடிப்பதற்குள், வந்தவர் "அதென்ன சர்மாஜி! இப்படி இன்றைக்கே சொல்கிறீர்கள்! ஏன்! யாராவது விசாரிக்கவந்தவர்கள் தாறுமாறாகப் பேசினார்களா? அதுகிடக்கிறது போங்கள். இதை எல்லாம் கவனித்து லக்ஷ்யம் செய்துகொண்டிருந்தால் நமது பொறுமையே பறந்துவிடும். சொல்கிறவர்களுக்கென்ன ஸார்! ஏதோ உளறிக்கொண்டுதானிருப்பார்கள்; உங்கள் மனைவி சந்தோஷமாயிருக்கிறார்களா? அப்படி எங்காவது அழைத்துச் செல்வது தானே!" என்றார்.

இதற்கு என்னபதில் சொல்வதென்றே தெரியாமல் சற்று திகைத்தார். தன்னைப்போல் நான்காம்தாரம் விவாகம்செய்து கொண்டவராதலால் அவரிடம் தான் ஒளிக்காமல் விஷயத்தைக் கூறி என்ன செய்யலாம் என்று யோசனை கேட்கவேண்டும் என்று தோன்றிவிட்டது. ஆகையால் அவரைத் தன்னுடைய தனி அறைக்கு அழைத்துச்சென்று...."சார்! நீங்கள் ஏதோ பேசுகிறீர்கள்; நான் ஏதோ சொல்லமுடியாத அவஸ்தைப்படுகிறேன். எனக்கு இப்போதுள்ள நிலைமையில் எங்காவது சொல்லாமல் ஓடிவிடலாமா என்று இருக்கிறது. என்னசெய்வது சார்? சொல்லவும் வெட்கம்? சொல்லாமலிருக்கவும் துக்கம். என்னசெய்வேன். என்னுடைய வயிற்றில் பிறந்தவர்களே எனக்குச் சத்ருவாகிவிட்டார்கள். நான் கலாவதியை அழைத்துக்கொண்டு வந்தநிமிடமே அவளிடம் ஏதேதோ கலகம்செய்து புத்தியைக் கலைத்து என்னிடம் பெரிய வெறுப்பை உண்டாக்கிவிட்டு இருவரும் எங்கேயோ ஊருக்குப்

போய்விட்டார்களாம். இந்த வெட்கக்கேட்டை யாரிடம் சொல்லி முறையிடுவேன்? என்னுடன் வெகுவெகு உத்ஸாகமாய்குசாலாய்வந்த வளை மனத்தை எப்படியோ முறியடித்துவிட்டதால் சாப்பிடக்கூட இல்லாமல் படுத்துக்கிடக்கிறாள். இந்த ப்ராரப்தத்திற்கு நான் என்னசெய்வேன் ?" என்று இதயத்தை வெடித்துவிடும்போல் இருந்த சங்கடம் சிறிது குறையும்படியாகக் கூறிவிட்டார்.

வந்தவர்:—ஓகோ! விஷயம் இத்தனை தூரம் விபரீதமாகிவிட்டதா சார்! நான்மட்டும் அப்போதே நினைத்தேன். உமது மக்களாலேயே ஏதாவது அசம்பாவிதம் நேருமோ என்று பயந்தது சரியாகிவிட்டது. அந்த சுண்டைக்காய் பசங்களால் உம்மை என்ன செய்துவிடமுடியும் என்கிறேன்? உம்முடைய பையனிருக்கிறான் பாரும் அவன் நடத்தையே நன்றாகஇல்லை. அதைத் தாங்கள் கண்டிக்கவேண்டும். அவனுக்கு இனிமேல் நீங்கள் அனுவச்யமாய் சம்பளத்தைக்கட்டிப் படிக்கவைக்கவேண்டாம். அதன் வாயில்மண்ணைப்போட்டால் கொட்டம் அடங்கிவிடும். பெண்ணைக் கூட சற்று பதம்பார்த்தே நடத்தவேண்டும். தெரிந்ததா? என் சிநேகிதரின் மகன் இருக்கிறான். அவனுக்கு விவாகத்தை முடித்துத் தூக்கிவிட்டால் பிறகு அவளும் சரியாகிவிடுவாள். அதோடு படிப்பு! படிப்பு! என்று வீணாகப் பணச்செலவும் நின்றுவிடும். குடும்ப ஸ்த்ரீகளுக்குஇன்னும்என்ன படிப்புவேண்டியிருக்கிறது? காலேஜ்படிப்பு படித்துவிட்டு உத்யோகமா செய்யப்போகிறாள்?... அதெல்லாம் கிடக்கட்டும் ஸார்! முதலில் நீங்கள் ஒருகாரியம் செய்யுங்கள். இன்றிரவே உங்கள் மனைவியை அழைத்துக் கொண்டு எங்காவது வெளியூருக்குச் சென்றுவாருங்கள். அதன் பிறகு சற்று சமாதானமாகிவிடும்" என்று தூபம் போட்டார்.

நடந்தது ஒன்று. இவர் கயிறுதிரித்துச் சொல்லியது ஒன்று. இப்போது என்னசெய்வதென்று தெரியாது தத்தளிக்கும் நிலைமை ஒன்று. வீட்டிலோ யாருமே இல்லை. வீட்டை யாருடைய பார்வையில் விட்டுவிட்டுச் செல்வது என்கிற குழப்பம் வேறு வந்துவிட்டது. எதற்கும் கலாவதியைப் பார்க்கலாம். பிறகு ஒரு யோசனை செய்யலாம் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, வந்தவரை யொருவாறு பேசி யனுப்பிவிட்டு, வாசற்கதவையும் சாத்தித் தாழ்ப்பாள்போட்டுக்கொண்டு கலாவதியைப் பூட்டியுள்ள மாடி அறைக்குப்போக முயன்றார்.

அப்போது யாரோ தடதடவென்று கதவைத்தட்டும் சத்தம் கேட்டு எரிச்சலுடன் "சனியன் பிடித்தவர்கள் யாரோ தெரியவில்லையே! என்று சீறியவாறு வந்து "யார் ?!" என்று கர்ஜித்தார்.

"ஓ! விசுவநாத சர்மாவா! சந்தோஷம் சார்! கதவைத் திறவுங்கள். நாங்கள் பத்திரிகை ரிப்போர்ட்டர்கள் உங்களுடைய ஜெயப்ரதமான இக்காரியத்தைக் கேள்விப்பட்டு விசாரிக்கவந்தோம். உங்கள் மணக்கோலத்துடன் கூடிய புகைப்படமிருந்தால் தயவு செய்து கொடுக்கவேண்டும். இல்லாவிடில் நாங்கள் காமெரா

கொண்டுவந்திருக்கிறோம்" என்று நகைத்துக்கொண்டே கூறினார்கள்.

ஐயோ பாவம்! சர்மாவுக்கு எப்படிதானிருக்கும்? இவர்கள் இத்தகையவர்கள் என்று தெரிந்திருக்குமாயின் சர்மா குாலே கொடுத்திருக்கமாட்டார். "தெருப்பொருக்கி சோம்பேறிப் பசங்களுக்கு வேறு வேலை கிடையாதுபோலிருக்கிறது. சீச்சீ! வெளியே போங்கள்" என்று கூறியபடியே விருவிருஎன்று போய்விட்டார். அதே சமயம் அவர்கள் கடகடவென்று சிரித்துக்கொண்டு போகும் சப்தம் கேட்டதும் திடீரென்று இவருடைய கோபம் பூராவும் தேவநாதன்மீதுதான் தாவித் துடித்தது. அந்த மடயன் தான் இப்படித் தன் சோதா நண்பர்களைவிட்டு இம்மாதிரி கேலி செய்து அவமானப்படுத்தும்படிக்குச் சொல்லியிருக்கிறான் என்று விபரீதமான த்வேஷபுத்தி உண்டாகிவிட்டதால் ஆத்திரத்துடன் தன்னறைக்குச் சென்று உடனே அவன்மீது பெரிய சந்தேகத்தையும் குற்றச் சாட்டையும் யாரோ எழுதுவதுபோல் தானே எழுதி அதை காலேஜ் ப்ரின்ஸ்பாலுக்கு அனுப்பிவிடவேண்டும் என்ற ஆத்திரத்துடன் ஓடினார்.

இவர் இத்தனை நேரம் தனது ஆபீஸ் அறைக்குப்போகவே இல்லை. இவருடைய மேஜைமீது ஒரு கவர் இருப்பதைக் கண்டதும் வியப்புடன் பார்த்தார். அது தன் மகன் எழுதியது என்பது தெரிந்ததும் அவருடைய ஆத்திரம் அதிகரித்தது. "கடிதம் வேறு எழுதிவைத்துவிட்டுக் கம்பிநீட்டியிருக்கிறானு! தடிக்கழுதை என்ன உளறி இருக்கிறது பார்க்கலாம்" என்று ஆத்திரப்பட்டவாறு கடிதத்தைப் படிக்கவாரம்பித்தார்.

"நமஸ்காரம்.

உலகத்தில் கீழ்வரும் சந்ததியார்கள் நன்குஉணர்ந்து அறிந்து உய்யும்பொருட்டுதான் பலபல சரித்திரங்கள் தோன்றியிருக்கின்றன. பல பெரிய மகான்கள் சிலாசாஸனம்போலும், வாழ்வின் வெற்றிச் சிகரத்தின் உச்சியில் ஏறி ஜெயபேரிகை அடித்து மக்களைத் தட்டிஎழுப்பி சீரியவழியைச் சிந்தனையில் புகுத்துவதற்காகவும்தான் அரிய பாடல்களையும் எழுதியிருக்கிறார்கள். ஒரு மடையன் 'நாம் குருடனாக இல்லாது கண்ணுடன் இருக்கிறோமே!' என்கிற சந்தோஷத்துடன் குருடன்போல் நடந்து, வழியிலிருந்த தனக்குவியலைத் தாண்டிச் சென்றதுபோல் தற்காலத்தில் மக்கள் மேற்படி சிறந்த தனக்குவியலைத் தாண்டிச் சென்றே வாழ்க்கையை நடத்தி நாசமாகிறார்கள். மிருகங்களைவிட உயர்ந்த ஜன்மம் எடுத்து ஆறறிவு படைத்துள்ளதன் பயனாகக் கூடுமானவரையில் அறிவுக்கும் ஆத்மாவுக்கும் சிறந்த முறையைத் தேடிப் பயன்பெறவே நான் விரும்புகிறேன். உலகம் அழிந்தாலும் அவ்வையாரின் சரிதம் அழியாது. அவளுடைய உடன்பிறந்த ஆறுமக்களின் சரிதையும் பெற்றோரின் சரிதையும் அழியாது. அதுபோல் அவ்வையின் அமுதப்ரவாகம் போன்ற பாடலின் சக்தியும் அழியாது.

"இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரம் அவனுக்கு அன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ."

என்ற பாடலையே நான் இப்போது என் வாழ்க்கைக்கு அருந்துணையாகக் கொண்டுள்ளேன். ஏன்? என் செல்வச் சகோதரிக்கும் அதையே நான் வற்புறுத்தி ஊட்டுகிறேன். "மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்" என்கிற நம்பிக்கை என்னும் பாலத்தின் மீதுதான் நான் எனது புத்தி தெரிந்த நாள் முதலாக நடந்துவருகிறேன். அதைத் தாங்களும் அறிந்திருக்கலாம். "தோன்றிற் புகழொடு தோன்றுக." என்ற திருவள்ளுவரின் திவ்ய வாக்கின்படி ஒவ்வொருவரும் தோன்றுவராயின் உலகத்தில் வித்யாசமோ, பகைமையோ, வேற்றுமையோ ஒன்றும் அணுகாது; ஆனால், அத்தகைய பாக்யம் கிடைப்பதுதான் துர்லபம். எனினும், கூடுமானவரையில் மனித ஜென்மம் எடுத்த ஒவ்வொருவரும் அதிக பாவத்திற்கும் பழிக்கும் தன்னை இலக்காக்கிக்கொள்ளாமலிருக்கும் முறையிலாவது பழகினால்போதும் என்கிற நோக்கத்துடன்தான் எழுதுகிறேன்.

மனிதர்களின் அறிவைக் கெடுத்து வாழ்வைச் சிதறவடிப்பதற்குப் பலவித சத்ருக்கள் உண்டு. அவைகளை மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்று பெரியார் வகுத்திருக்கிறார்கள். இந்த ஒவ்வொரு வரியிலும் எத்தனையோ தத்துவங்கள் அடங்கிக் கிடக்கின்றன. அவைகளுக்கு ஒத்து ஊதி தாளம் தட்டித் தூபம் போடுவது போன்ற இதர சில்லரை விஷயங்களும்கூடச் சேர்ந்து பாழாக்குவதில்—சந்தேகம் என்ற ஒரு பிசாசு—மிக மிக உக்ரகம் பொருந்தியதாகும். அத்தகைய பிசாசு சாதாரணமாகப் பலரைப் பிடித்து ஆட்டுவதுபோலல்லாமல் தங்களைப்போன்ற நான்காந்தாரம் விவாகம் செய்துகொள்கிறவர்களை வெகு மும்முரமான ஆவேசத்துடன் பிடித்து ஆட்டும் என்பதை உலகமறியும். அதை இன்றே சில நிமிஷத்திற்குள் பார்த்தாகிவிட்டது. அத்தகைய பிசாசின் முதல் தூபந்தான், எனக்கும் என் சகோதரிக்கும் பயித்தியம் பிடித்திருப்பதாகத் தாங்கள் என் சிறிய அன்னையிடம் கூறியதாகும். இதை உணர்ந்தபிறகும் உங்களுக்கும் அந்த இளநங்கைக்கும் மனக்கிலேசத்தையோ, கசப்பையோ கொடுத்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. நல்ல பெயருடன் உத்தமனாகவாழ ஆசைப்படுவதாலும் தாயற்ற என் செல்வத்தங்கையையும் அப்படியே வளர்க்க ஆசைப்படுவதாலும் நாங்கள் இப்போதே வெளியேறிவிடுகிறோம். மேலே சொல்லியபடி எங்கள் தலையில் சட்டமாக எழுதிய எம்பெருமான் எங்களைக் கைவிடமாட்டார். காப்பாற்றியே தீருவார். உங்கள் பணத்தின் மோகத்திலும், அல்ப ஆசைகளின் ஊசலில் ஆடும் புதிய வாழ்க்கைப்புயலில் திளைவதாலும் நீங்கள் கடவுளை நம்பவில்லை. ஆனால், நான் அவனை பரிபூர்ணமாக நம்புகிறேன். அதனால்தான் நிர்ப்பயமாக எழுதுகிறேன்.

(மஞ்சள் குங்குமம் தொடர்ச்சி)

இருவர் இருந்தால் ஒருவர் வெளியில் போகவேண்டிய வீடுகளுக்கெல்லாம்போய் மஞ்சள் குங்குமம்பெற்றுக் கொள்ளலாம்; இன்னொருவர் வீட்டில் இருந்து வருபவர்களுக்கு தாம்பூலம் கொடுக்கலாம். ஒன்பதுநாளும் வருவார்கள். மறுநாள் மாற்றிக்கொள்ளலாம். தினமும் பெண்கள் வருவது மங்களகரமாக இருக்கும். ஒரே நாளில் வருபவர்கள் வந்துவிட்டு மற்றநாளில் ஓய்ச்சலாக இருக்கும். ஆனால், அப்படிச் செய்ய இரண்டாவது முக்கிய மனிதர்கள் இல்லாமல் நடக்காது."

"ஒன்பதுநாளும் என்ன விசேஷம் கலா.?"

"மகாகவி பாரதியார் சக்தி, ஐச்வர்யம், பண்பு மூன்றும் வாழ்வினுடைய முப்பெரும்ஜோதி என்று வர்ணித்துப் பாடியிருக்கிறார். ஒரு மனிதனுக்கு அகண்ட ஐச்வர்யம் இருந்தும் பலம், சக்தி இல்லாவிட்டால் ஐச்வர்யத்துக்குச் சோபிதம் உண்டாகுமா? இவை இரண்டும் இருந்து—முரட்டு பலம், அளவிலா ஐச்வர்யம்,—ஆனால், உன்னதமான குணமின்றி மிருகமாக இருந்தால் நாம் என்ன சொல்லுகிறோம். "அசுரன், பலமும், பணமும் இருக்கிறதே, என்னபிரயோஜனம், கொஞ்சம்கூட குணமின்றி இவன் மனுஷனா?" என்று வெறுக்கிறோம். குணசம்பத்–அந்த மிகச்சிறந்த பண்பாடு–கலைமகள் அருளாலல்லவா கிடைக்கிறது. எனவே இம்மூன்றுமின்றி வாழமுடியாது. இம்மூன்றுக்கும் பெண் தெய்வமே அதிதேவதை. பெண்ணை பாரதியார் மறைமுகமாக இப்படியும் போற்றுகிறார். தேவியை மூன்றுவிதமாக பூஜிப்பதே நவராத்திரி.

நவராத்திரி பெரிய பண்டிகையா? ஏதோ விளையாட்டாகவல்லவோ இருக்கிறது! அல்லவா?"

"ஒவ்வொரு பண்டிகையும் ஒரு மகாத்மியத்தோடுதான் இருக்கிறது. தாரதம்மியமில்லை. நவராத்திரி பெரிய பண்டிகைதான். வடஇந்தியர்கள் பூஜாதினங்களென்றுவெகுநேர்த்தியாய்க்கொண்டாடுகிறார்கள். சுதேச சமஸ்தானங்களில் கவிகளுக்கும், பாடகர்களுக்கும் பட்டமும், பரிசும், தான–தர்மமும், வேடிக்கை விநோதத்துடன் கொண்டாடுகிறார்கள். தென்னிந்தியர்கள் குழந்தைகளுக்காக விதவிதமான பொம்மைகளை அழகாக வைத்து பெண்களுக்கு மஞ்சள் குங்குமம் கொடுப்பது, பெரியவர்கள் பூஜை, பாராயணம் செய்வது—இப்படியாகக் கொண்டாடுகிறார்கள்.

"விவாதம் போதும். இன்று விஜயதசமியாக இருக்கிறது. எல்லோரும் ஒரு பாட்டாவது பாடுங்கள்" என்றாள் சாவித்திரி மாமி.

"விவாதம் இல்லை மாமி! ஸ்ரீமதி கலாவதி அம்மையார் அழகான சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார்கள்."

போதுமே உன் கிண்டல்! பாடிவிட்டு மஞ்சள் குங்குமம் பெற்றுக்கொள்ளுங்கள். மழை வரும்போலிருக்கின்றது. வீட்டுக்கு போய்ச் சேரணும்.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.,

இதுவும் ஒரு காந்தி ஸேவையாகும்

திருவல்லிக்கேணி மஹாத்மாஜி ஸேவா சங்கத்தின்
மாணவர் இலவசச் சம்பள நிதிக்கு நன்கொடையளிக்க
யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரு. 3-8-0. உயரிய கிளேஸ் பதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
ஷை பதிப்பின் லாபம் சங்க இலவசச்சம்பள நிதிக்கே!